144430


# புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1945-ம் வரு மேமீ 5உ [ந. 247


தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CCXLVII.

## ஜெர்மானியர்கள் இன்று என்ன நினைக்கிறார்கள்?

### மயக்கத்திலிருந்து விழித்துக்கொள்கிறார்கள்.

(விக்டர் தாம்ஸன் ஆஸ்னபர்க்கிலுள்ள டெயிலி ஹெரால்டின் நிருபர்).

நேசதேசத்தார்கள்—ஜெர்மனியில் அடி வைத்தது முதல் நான் அநேக ஜெர்மானியர்களுடனும், பொதுமக்களுடனும், ஸோல்ஜர்களுடனும் சம்பாஷணை செய்திருக்கிறேன். அவர்களில் பெரும்பான்மையோர் பீதி அடைந்தவர்கள். அவர்களுடைய வார்த்தைகளை அதிகமாக நம்பக்கூடாது. அவர்களிடமிருந்து இப்பொழுது ஜெர்மானியர்களின் மனோநிலை எப்படியிருக்கிறதென்று கண்டுபிடிப்பது சிரம சாத்தியமாகும். பிரிடிஷ் இரண்டாவது சேனை பிடித்த ஆஸ்னபர்க்கில் நல்ல புத்தியுள்ள, வாக்சாதுர்யமுள்ள ஒரு ஜெர்மனை நான் கண்டேன். அவன் நடு வயதுள்ள ஜன சமூக ஜனநாயக மனப்பான்மையுள்ளவன். ஒரு சிறு கோஷ்டியுடன் நாஸிகளைக் குறித்து அவன் கீழறுப்பான் வேலை செய்து வந்தான். காவல் முகாம ஒன்றில் அவன் மூன்று வருஷம் வசித்தான். நமது அதிகாரிகள் அவனுக்கு அபயப் பிரதானம் செய்தார்கள். நான் அவனுடன் வெகு காலம் சம்பாஷித்தேன். அவனுடைய அபிபபிராயம் என்னவெனறும், மந்த புத்தியுள்ள ஏமாற்றமடைந்த ஜெர்மன் மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்றும், அவன் என்னிடம் சொன்னான். அவனுடைய விருத்தாந்தம் பின்வருமாறு:—

"யுத்தம் முடிந்தபோது நேசதேசத்தார்கள் ஜெர்மனியை குறைந்த பக்ஷம் 20-வருஷமாவது ஆக்கிரமிக்கவேண்டும். அவர்கள் கனமான கைத்தொழிற்சாலைகளையும், எல்லா சங்கங்களையும், ஸ்தாபனங்களையும், ராஜீய ஜனசமூக விளையாட்டுக் கக்ஷிகளையும் அடக்கி ஆளவேண்டும். நாஸிகள் இந்தக் கபடமற்ற ஸ்தாபனங்களைக் கொண்டு தங்களுடைய கொள்கையை உத்தாரணம் செய்ய முயற்சி செய்வார்கள்.

"20-ம் வருஷம் முதல் ஹிட்லரின் மிகவும் ஆழ்ந்த சிஷ்யர்களாகவும் ஏமாற்றப்பட்டவர்களுமான வாலிபர்களைத் திருத்தி அமைப்பது உபயோகப்படாது. அவர்களை இழந்த சந்ததியாராகக் கருதவேண்டும். நேசதேசத்தார்கள் நாஸிகளைப்போல குழந்தைகளை நல்ல வழியில் கொண்டுவரவேண்டும். புதிய சந்ததியாருக்கு சென்ற சந்ததியின் தீமையையும்,

முட்டாள்தனத்தையும், எதிர்காலத்தின் இயல்புகளையும் எடுத்துக்காட்டவேண்டும். அவர்கள் ஓரளவு பெற்றோர்களின் செல்வாக்கை அழிக்கவேண்டும். நாஸிகளல்லாத என்னுடைய நண்பர்களுக்கு தங்களுடைய குழந்தைகளையே தெரியாது. வயது முதிர்ந்த குழந்தைகள் பெற்றோர்களை நிந்திக்கிறார்கள். இதுதான் அவர்களுக்கு கிடைத்த போதனை. இது ஹிட்லர் நாட்டிற்குச் செய்திருக்கும் தீங்கின் ஓர் அம்சம். அவனுடைய எண்ணங்கள் இல்லாவிட்டாலும் அவனுடைய முறைகளைக் கையாண்டுதான் அந்தத் தீங்குகளை அழிக்க முடியும்.

"கீழ்ப்படிந்து நடப்பது என்ற ஐதிகத்தில் பயிற்சி பெற்ற என்னுடைய தேசத்தார்களின் பெரும்பான்மையோர் அதிகாரத்திலுள்ள எவருக்கும் சேவை செய்வார்கள். இதே சமயத்தில் அதிகாரம் பெறுவதற்கு ஒரு பெரும்பான்மையோர் முயற்சி செய்து வருகிறார்கள். இது வெகு நாளாக நடைபெற்று வருகிறது. யுத்தம் முடிந்தாலும் இந்த முயற்சி முடியாது.

"ஆகையினால்தான் ஜெர்மனியின் எதிர்ப்பு நின்ற சில மாதங்களுக்குப்பின் கீழறுப்பான் வேலை ஆரம்பமாகும். வாலிபமுள்ள நாஸிகள் ஒளிகளிலிருந்து வெளிவந்து சாதாரண மக்களைப் பயமுறுத்தி அவர்களுக்கு உதவி செய்யும்படி கட்டாயப்படுத்துவார்கள். கீழ்ப்படிந்து நடப்பவர்கள் அவர்களின் சொற்படி நடப்பார்கள். ஆனால் ஆக்கிரமித்திருக்கும் வல்லரசுகள் அவர்களைக் காப்பாற்ற பலம் பெற்றிருக்கவில்லை என்று அவர்கள் உணர வேண்டும். என்னுடைய நாட்டைப்பற்றியே இவ்விதம் பேசுவதற்கு நான் வெட்கப்படுகிறேன். ஆனால் நம்முடைய வியாதி குணம் அடையவேண்டுமென்றால் நாம் கசப்பான மருந்தை உட்கொள்ளவேண்டியதுதான்."

சொந்த புத்தியை உபயோகிக்கக்கூடிய இந்த ஜெர்மானியர் நம்பிக்கையற்ற சமிக்ஞைகளுடன் இவ்வாறு பேசினார். சென்ற காலத்தைப்பற்றியும் தற்போது உள்ள நிலைமையைப் பற்றியும் அவர் பேசும் போது அவருக்கு அதிக வருத்தம் உண்டாயிற்று. அவன் பின்வருமாறு சொன்னான்:—"நாஸிகள் மத்தியில் நீங்கள் வசித்து வந்தால் ஒழிய அவர்களின் பூரா அக்கிரமங்களையும் நீங்கள் அறியமுடியாது இந்த ஆஸ்னுபர்க் நகரம் பூராவும் அவர்கள் வசமிருந்தது. கொள்ளையடிப்பு உச்சநிலையிலிருந்தது. ஜனங்கள் அவர்களுக்குக் கப்பம் கட்டியும் சேவை செய்தும் ஜீவித்து வந்தனர். ஒருவனுக்கு ஒரு வேலை வேண்டுமென்றால் அவன் ஒரு கக்ஷியில் சேர்ந்துகொள்ளவேண்டும் அல்லது கோஷ்டி மெம்பருக்கு லஞ்சம் கொடுக்கவேண்டும். நானும என்னுடைய இரண்டு மகன்களும் சென்ற மாரி காலத்தில் சேனையில் சேர்ந்துகொள்ளாமல் இருப்பதற்கு உள்நாட்டு அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்தோம். பிரசாரத்தில் அநேகர் மூழ்கியிருந்தபடியால் இந்தக் கொடுங்கோன்மையை அவர்கள் ஆதரித்து வந்தார்கள். இதைத் தவிர அவர்களைத் திருப்தி செய்ய அவர்களுக்கு ஏராளமான உணவுப் பொருள்களும் காகிதங்களும் வழங்கப்பட்டன.

ஸ்டாலின்கிராட் யுத்தத்துக்குப்பின் புத்திசாலிகளான ஜெர்மானியர்கள் யுத்தத்தை இழந்து விட்டோம் என்று உணர்ந்தார்கள். ஆனால் அவிவேகிகளான பொதுமக்கள் வெகு சமீபத்தில்தான் உண்மையைச் சந்தேகிக்க ஆரம்பித்தார்கள். இப்போதும் சிலர் ஹிட்லர் சொப்பனவித்தை மூலம் யுத்தத்தில் வெற்றி பெறுவான் என்று நம்புகிறார்கள். ஹிட்லரிடம் அவர்களுக்குள்ள நம்பிக்கை ஆச்சரியமானது. ஹிட்லர் வாலிப இயக்கத்தில் காணப்படும் மத சம்பந்தமான நடவடிக்கைகளையும், மெயின்காம்ப் போன்ற புஸ்தகங்களில் காணப்படும் உபதேசத்தையும், நாஸிப்பிரசாரகர்கள் சொல்லுவதுபோல் ஹிட்லர் அவர்களுடையதெய்வம்.

இப்பொழுது நகரங்கள் பாழாக்கப்பட்டும், பந்துக்கள் கொல்லப்பட்டும், நாட்டில் ஒரே குழப்பமும் காணப்படுவதால் சாதாரண ஜனங்களுக்கு இப்பொழுதுதான் மயக்கம் தெளிவு படுகிறது. நாஸி தத்வம் மிகுந்தவர்களும் நான் சொல்வது சரியென்று சமீப காலத்தில் என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். எல்லா வகையிலும் ஏமாற்றப்பட்டு விட்டதாக சாதாரண மக்கள் இப்பொழுது வெளியிடுகிறார்கள். தங்கள் பெயரை வைத்துக்கொண்டு அக்கிரமங்களைச்செய்து கொள்ளை அடித்ததற்கு, அவர்கள் உடந்தையாக இல்லையென்றும், வஞ்சகத்தில் அகப்பட்டுக்கொண்டார்களென்றும், அவர்கள் உணர்ந்துவிட்டார்கள். அநேகமாகத் தோற்றுவிட்ட யுத்தத்தை இன்னும் சில நாள் ஜீவித்திருக்கத்தான் நாஸித் தலைவர்கள் நடத்தி வருகிறார்களென்று, அவர்கள் சந்தேகப்படுகிறார்கள். ஆனால் யுத்தத்தில் முறியடிக்கப்பட்டு வெளியேறுவதில் அவர்களுக்கு மிகுந்த சந்தோஷம். சென்ற சமயத்தில் நேசதேசத்தாரின் ஆக்கிரமணம் கெடுதலாக இல்லையென்றும், நேசதேச ஸோல்ஜர்கள் அவர்களை நண்பர்களாகவும், மரியாதையுடனும் நடத்தினார்களென்று சொல்லுகிறார்கள்.

ஆனால் அவர்களுடன் அதிகச் சிநேகம் கொண்டாடாதீர்கள். ரொம்பவும் அனுதாபம் காட்டுவதும் ரொம்பவும் குரூரமாக இருப்பதும் கெடுதல்தான்."

# வார யுத்தச் செய்திகள்.

## (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 24—4—45 (செவ்வாய்க்கிழமை). | நேசதேசப் படைகள் இதாலியில் பெராரா, மோடனு, லாஸ்பென்ஸியாவைப் பிடித்தன. |
| 25—4—45 (புதன்கிழமை). | அமெரிக்கர்கள் ரெயூகியூஸில் பின்னும் மூன்று தீவுகளிலிறங்கினர்கள். <br> நேசதேசப் படைகள் பர்மாவிலுள்ள எண்ணெய் ஸ்தலங்கள் எல்லாவற்றையும் பிடித்தார்கள். <br> ருஷ்யர்கள் பெர்லினைச் சுற்றி வளைத்துக்கொண்டார்கள். |
| 26—4—45 (வியாழக்கிழமை). | பிரிடிஷ் படைகள் ஜெர்மனியிலுள்ள பிரெமனைப் பிடித்தன. <br> ருஷ்யர்கள் ஸ்டெட்டினைப் பிடித்தார்கள். |
| 27—4—45 (வெள்ளிக்கிழமை). | இதாலிய தேசாபிமானப் படைகள் வடக்கு இதாலியில் பகிரங்கமாகக் கலகம் செய்ய ஆரம்பித்து விட்டன. <br> அமெரிக்க ருஷ்யச் சேனைகள் ஜெர்மனியில் டோர்காவில் சந்தித்தன. <br> நேசதேசப் படைகள் இதாலியில் ஜெனேவாவை ஆக்கிரமித்தன. |
| 28—4—45 (சனிக்கிழமை). | அமெரிக்கர்கள் பிலிப்பைன்ஸிலுள்ள பாகிபிவோவை ஆக்கிரமித்தார்கள். |
| 29—4—45 (ஞாயிற்றுக்கிழமை). | மிலானில் முஸோலினி இதாலிய தேசாபிமானப் படைகளால் கொலை செய்யப்பட்டான். |
| 30—4—45 (திங்கட்கிழமை). | பிரெஞ்சுப் படை ஆஸ்திரியாவுக்குள் நுழைந்தது. <br> ருஷ்யக் கொடி பெர்லினில் காரியாலயத்தின் பேரில் பறக்கிறது. |
| 1—5—45 (செவ்வாய்க்கிழமை). | நாஸிகள் ஹிட்லர் இறந்துவிட்டதாக வெளியிட்டார்கள். <br> யூகோஸ்லாவியர்கள் இதாலியில் பிரிடிஷ் 8-வது சேனையுடன் தொடர்பு ஏற்படுத்திவிட்டன. |
| 2—5—45 (புதன்கிழமை). | இதாலியிலுள்ள ஜெர்மன சேனை பீல்ட் மார்ஷல் அலெக்ஸாண்டரிடம் நிபந்தனையற்ற சரணாகதியைச் செய்தது. <br> ருஷ்யர்கள் பெர்லின் பூராவையும் ஆக்கிரமித்தார்கள். |
| 3—5—45 (வியாழக்கிழமை). | பிரிடிஷ் 14-வது சேனை ரங்கூனைப் பிடித்தது. |

## (B)-செய்திச் சுருக்கம்.

**ஹாலந்து**—எம்ஸ் நதி முகத்துவாரத்தின் தெற்குக்கரை ஓரமாக கனடியப்படைகளின் முன்னேற்றம் நடைபெறுகிறது. ஜெர்மனியின் கடைசி தற்காப்பு அரணுவதும் குரோனிஞ்சனுக்கு வடகிழக்கிலுள்ளதுமான ஸ்பிஜெக் சுற்றி வளைக்கப்படுகிறது. எம்டனுக்குத் தென்கிழக்கில் 14 மைல்களிலுள்ள லீரின் பெரும்பாகம் கனடிய வசமாகிவிட்டது. பிரமனுக்கு மேற்கில் 24 மைல்களிலுள்ள ஓல்டன்பர்க்குக்குள் படைகள் நுழைந்துவிட்டன.

**பிரிடிஷ் 2-வது சேனை.**—ஹாம்பர்க்குக்கு தென்மேற்கில் விட்டன்பர்க் பகுதியிலுள்ள எல்பே நதியைத் தாண்டியபின் பால்டிக் கடற்கரையிலுள்ள லூபெக்கை நோக்கி முன்னேறுகிறது. பிரெமனுக்கு சமீபத்திலுள்ள ஆர்ஸ்டென், செவின், லாயர்பர்க்கைப் பிடித்தது.

**பேர்லினுக்கான போர் நடைபெறுகிறது.**—நகரத்திலிருந்து வெளியே போகும் ரஸ்தாக்கள் துணிக்கப்பட்டன. முக்கியபாகஙகளான ஸ்பாண்டா, ராதெனௌ, பாட்ஸ்டாம், சார்லாட்டன்பர்க், மொயாபிட், வில்மர்ஸ்டார்ப் விழுந்துவிட்டன.

**அமெரிக்க 1-வது சேனை.**—ஜெர்மனிக்குள் லீப்ஸிக்குக்கு வடகிழக்கில் 30 மைலிலுள்ள டார்காவில் ருஷ்ய சேனையுடன் சந்தித்தது. ஜெர்மனி இரண்டு பாகமாக துணிக்கப் பட்டது. பிராண்டன்பர்க்குக்குத் தென்கிழக்கிலுள்ள செர்ப்ஸ்ட் பிடிபட்டது.

**அமெரிக்க 3-வது சேனை.**—அமெரிக்க 7-வது சேனையுடனும் பிரெஞ்சு 1-வது சேனையுடனும் ஹிட்லரின் தெற்கு கொத்தளமான பவேரியாவுக்குள் நுழைந்து ரீஜென்ஸ்பர்க், ஆக்ஸ்பர்க் முதலியவற்றைப் பிடித்து மூனிச்சுக்குள் புகுந்துவிட்டது. அது ஆஸ்திரியாவுக்குள் நுழைந்துவிட்டது. செகோஸ்லோவேகியாவிலுள்ள எகரைப் பிடித்தது.

**பிரெஞ்சு 1-வது சேனை.**—டான்யூப் நதியைத் தாண்டி ஸ்விஸ் எல்லைச் சரகத்தில் ஏரிக்கருகிலுள்ள ஜெர்மன் நகரமான கான்ஸ்டான்ஸைப் பிடித்தது.

**கிழக்குப் போர்முனையின் வடக்குப் பகுதியில்.**—ரொகோஸோவிஸ்கி போமரேனியாவின் தலைநகரான ஸ்டெட்டினையும், அதற்கு அருகிலுள்ள ஆங்கிளாமையும் பிடித்தான். அவன் பீல்ட்மார்ஷல் மாண்ட்காமரியுடன் சேர்ந்துகொள்ள பால்டிக் கடற்கரையிலுள்ள ரோஸ்டோக்கை நோக்கி முன்னேறுகிறுன்.

**கிழக்குப் போர்முனையின் தெற்குப் பகுதியில்.**—மொராவியாவின் தலைநகரமான புருனே பிடிபட்டது.

**இதாலி.**—வடக்கு இதாலி பூராவிலும் இதாலிய தேசாபிமானிகள் கலகம்செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். அவர்கள் முஸோலினியைப் பிடித்துக் கொலைசெய்துவிட்டார்கள். நேசதேசப் படைகள் போ நதியையும், அடிஜ் நதியையும் தாண்டிவிட்டன. பிரெஞ்சுப்படைகள் இதாலிக்குள் புகுந்து மத்தியதரைக்கடல் கரையிலுள்ள ஆல்ப்ஸ் மாரிடைம்ஸைப் பிடித்துவிட்டன. கீழ்கண்ட இடங்களும் பிடிபட்டன:—பெராரா, லா ஸ்பீஷியா, மொடெனு பாண்டனு, கோடிகாரோ, சார்ஸானு, பாஸ் டி ரீனுவோ, ரீன், வெரோனு, ஜூலா, ஜெனுவா, பியாசன்ஸா, ஆட்ரியா, மான்சா, பெர்கானு, பிரெஷியா, ரோவிகோ, கேடி, பாடுவா, விசென்சா, வெனிஸ், அலெஸ்ஸாண்டிரா, சியோகியா.

டிடோ ஹங்கேரிய யூகோஸ்லாவிய எல்லையில் சரோஜிவோவுக்குவடக்கிலுள்ள விரோவிடிகாவைப் பிடித்தான்.

**பசிபிக்.**—அமெரிக்கர்கள் ரெயுகியூஸ் தீவுகளில் ஒகினுவாவுக்கருகில் யாகாஜி, கௌரி, ஹெட்ஸாவில் இறங்கிவிட்டார்கள்.

படைகள் பிலிபைன்ஸில் மிண்டானுவுக்கு வடமேற்கிலுள்ள நெக்ராஸில் இறங்கி விட்டன.

மின்டானுவில் அமெரிக்கர்கள் மோரோ விரிகுடாவிலிருந்து டாவோ விரிகுடாவைத் தாண்டிவிட்டார்கள்.

லூசான் துறைமுகத்தில் விகான், பிலிப்பைன்ஸின் வேனிர்கால தலைநகரமான பாகியோ விழுந்துவிட்டன.

நியூகினியாவில் ஆஸ்திரேலிய முன்னேற்றம் வேவாக்கை அணுகிவருகிறது.

**சைனு.**—ஜப்பானியர்கள் லாசோகௌவிலும், சிக்கியாங்கையிலும் உள்ள அமெரிக்க விமான தளங்களை மறுபடியும் தாக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

**பர்மா.**—எண்ணெய் பிரதேசங்கள் பூராவாக சுத்தி செய்யப்பட்டுவிட்டன. 14-வது சேனை ரெங்கூனிலிருந்து 36 மைல்களுக்குள் வந்துவிட்டது. இந்த வாரத்தில் யேனுங்கியாங்கும், மாக்வியும், தவுங்கூவும், அலான்மியோவும், தையாட்மியோவும், மின்பூவும் பிடிபட்டன.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**22—4—45** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மனி (Germany), இதாலி (Italy).**

பகல்.—இலக்குகள்—பிரெமன் (Bremen).

ஜெர்மன் படைகள்.—இதாலியில் உள்ள போ (Po) சமவெளியில் பின்வாங்கும் படைகள்.

துருப்புகள், பீரங்கிகள், டாங்கிகள் வண்டிகள்.—வட இதாலி (North Italy).

**தூரக்கிழக்கு (Far East).**

கப்பல்கள்.—பார்மோசா (Formosa).

இலக்குகள்.—வட போர்னியோ (North Borneo).

பர்மா (Burma).
கால நிலையைப் பொருத்து விமான நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

**23—4—45.** (திங்கட்கிழமை).
ஜெர்மனி (Germany), இதாலி (Italy).
பகல்.—இலக்குகள்—பெர்லின் (Berlin).
பாலங்கள்.—அடிஜ் (Adige), பிரெண்டா (Brenta) நதிகளின் மேல்.
ஜெர்மன் துருப்புகள்.—வட இதாலியில் பின் வாங்கும் படைகள்.
இரவு—இலக்குகள்—கீல் (Kiel).
ரயில்வே தளங்கள்.—ரண்ட்ஸ்பாக் (Rundsbak).
கப்பல்கள்.—டிராமன்னிட் (Tramunede).

தூரக்கிழக்கு (Far East).
இலக்குகள்.—ஹொன்ஷூவிலுள்ள டோகாய் (Tokai) பிரதேசம்.
நாகோயா (Nagoya).

பர்மா (Burma).
ஸப்ளைக் குவியல்கள்.—ரங்கூன் (Rangoon).
எதிரி ஆக்கிரமித்த கிராமங்கள்.—ரங்கூனின் தென்மேற்கு பாகம், ஹென்ஸாடா (Henzada) விற்கருகில்.
ஜப்பானியச் சைனியங்கள்.—அரக்கான் (Arakan).

**24—4—45.** (செவ்வாய்க்கிழமை).
ஜெர்மனி (Germany), இதாலி (Italy).
இலக்குகள்.—ஜெர்மன் அதிகாரத்தில் உள்ள பிரதேசங்கள்.
ஜெர்மன் படைகள்.—வட இதாலியில் பின் வாங்கும் படைகள்.
ரயில்வே ஸ்தலம்.—பாடோல்ஸ்லாப் (Badoleslof).

தூரக்கிழக்கு (Far East).
விமானத்தொழிற்சாலை.—டாகிகா (Tachikaw).
ஜப்பானிய சைனியங்கள்.—ஓகினுவா (Okinawa).

பர்மா (Burma).
ஜப்பானிய இலக்குகள்.—பர்மா (Burma).

**25—4—45.** (புதன்கிழமை).
ஜெர்மனி (Germany), இதாலி (Italy).
பகல்—இலக்குகள்.—பிரெச்டெஸ்காடன் (Brechtesgaden).
ஜெர்மன் சைனியங்கள்.—வாங்கர்ரூக் (Wangeroog) தீவுகள்.
ஸ்கோடா தளவாடங்கள்.—பில்ஸன் (Pilsen) தொழிற்சாலைகள்.
ரயில்வே தளங்கள்.—லின்ஸ் (Linz).

தூரக்கிழக்கு (Far East).
கடற்படை ஸ்தாபனங்கள்.—ஸெய்கோன் (Saigon).
விமான நிலயங்கள்.—பார்மோசா (Formosa).
ரயில்வே இலக்குகள்.—சைனு (China).
இலக்குகள்—நெதர்லாண்ட்ஸ் (Netherlands), கிழக்கு இந்தியத் தீவுகள் (East Indies), நியூ கினியாவிலுள்ள வீவாக் (Wewak), நியூ அயர்லாந்து (New Irelands), நியூ பிரிடன் (New Pritain).

பர்மா (Burma).
கிராமங்கள்.—புரோமிற்கு (Prome) அருகில்.
போக்குவரத்துகள்.—டாஷியின் தெற்கு.

**26—4—45.** (வியாழக்கிழமை).
ஜெர்மனி (Germany), இதாலி (Italy).
பகல்.—ஒரு தகவலும் இல்லை.

தூரக்கிழக்கு (Far East).
விமான நிலையங்கள்.—கியுஷூ (Kyushu) ஷிகோகு (Shikoku).
இலக்குகள்.—டோக்கியோ (Tokyo).

பர்மா (Burma).
இலக்குகள்.—ரங்கூனிலும் (Rangoon) ரங்கூனைச்சுற்றிலும்.

**27—4—45.** (வெள்ளிக்கிழமை).
ஜெர்மனி (Germany), இதாலி (Italy).
இலக்குகள்.—பெர்லின் (Berlin).

தூரக்கிழக்கு (Far East).
விமான நிலயங்கள்.—கியுஷூ (Kyushu).

பர்மா (Burma).
குவியல் பிரதேசங்கள்.—ரங்கூன் (Rangoon) அதனைச்சுற்றிலும்.

**28—4—45.** (சனிக்கிழமை).
ஜெர்மனி (Germany), இதாலி (Italy).
ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

தூரக்கிழக்கு (Far East).
இலக்குகள்—இஷூமி (Izumi), மியாஷாகி (Miyazaki), கானோய் (Kanoya), கியூஷிரா (Kyushira), கோகுபு (Kokubu), மியாகொனியோ (Miyakonoyo).

பர்மா (Burma).
ஒரு தகவலும் இல்லை.

**29—4—45.** (ஞாயிற்றுக்கிழமை).
ஜெர்மனி (Germany), இதாலி (Italy).
ஒரு தகவலும் இல்லை.

தூரக்கிழக்கு (Far East).
இலக்குகள்.—பார்மோசா (Formosa), வடக்கு பார்மோசா (Northern Formosa).

பர்மா (Burma).
ஒரு தகவலும் இல்லை.

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**22—4—45.** (ஞாயிற்றுக்கிழமை) to **29—4—45.** (ஞாயிற்றுக்கிழமை).
பிரிடன் (Britain), ருஷ்யா (Russia)—எதிரி விமான நடவடிக்கைகள் இல்லை.
தூரக்கிழக்கு (Far East).—ஒரு தகவலும் இல்லை.

# யுத்தக் குறிப்புகள்.

**நிபந்தனையற்ற சரணகதியா.** நான் இதை எழுதும்பொழுது எங்கு பார்த்தாலும் ஜெர்மனி நிபந்தனையற்ற சரணகதியைச் செய்துவிட்டதென்றும் ஹிட்லர் இறந்து விட்டானென்றும் செய்திகள் பலமாக உலாவுகின்றன. ஹிட்லர் ரத்த நாளம் உடைந்ததன் காரணமாகவோ அல்லது சுட்டுக்கொல்லப்பட்டதின் மூலமோ இறந்தானென்றும் அவனுக்கு அடுத்தபடியாக வந்துள்ள ஹிம்லர் பிரிடனிடமும் அமெரிக்காவிடமும் நிபந்தனையற்ற சரணகதி செய்வதாக கேட்டுக்கொண்டானென்றும் ருஷ்யாவும் அதில் சேர்க்கப்படாததால் நேசதேசத்தார்கள் அதை அங்கீகாரம் செய்யவில்லையென்றும் கேள்விப்படுகிறோம். இந்த வதந்திகளின்படி நடவடிக்கை சம்பாவிதமானவையென்றாலும் அவைகள் இன்னும் ஊர்ஜிதப்படவில்லை. ருஷ்யாவை விலக்கி மேற்கு வல்லரசுகளுக்கு அடிபணிவதென்பது நேசதேசத்தார்களிடையே பிளவு உண்டுபண்ண வேண்டுமென்ற உத்தேசத்துடன் ஜெர்மனி செய்த மற்றொரு முயற்சியாகும். சமீப காலத்தில் டாக்டர் பிரிட்ஸ் ஹெஸ்ஸி மூலம் ஒரு முயற்சி செய்யப்பட்டது. அதன்பின் ஏப்ரல் மாதம் 16-ம் தேதியன்று மேற்குப் போர்முனையைக் கவனியாது கிழக்குப் போர்முனையில் போரை நடத்த வேண்டுமென்று ஹிட்லர் சேனைக்கு உத்திரவிட்டான். மேற்குப் போர்முனையிலிருந்து கிழக்குப் போர்முனைக்குப் படைகளையும் கொண்டு போனான். இது சரித்திர பூர்வமாக முக்கியத்துவமுள்ளதென்று அவன் சொல்லிவந்தான். ஆகிலும் ஜாக்கிரதையாக உள்ள நேசதேசத்தார் ஏமாற்றப்படமாட்டார்கள். பூராவாக சரணகதி இல்லாவிட்டாலும் எதிரிக்கு பூர்ணமான தோல்வி ஏற்படும் நாள் வெகுதூரத்திலில்லை.

வி வி வி வி வி

**ஹிட்லர் இறந்தானு?** பூரரைப்பற்றி நாஸிகள் வதந்திகளுக்குமேல் வதந்திகளை அடுக்கிவருகிறார்கள். ஒரு சமயத்தில் அவன் கலியாணம் செய்துகொண்டு பவேரியாவிலுள்ள ஆல்ப்ஸில் உல்லாசமாக நாளைக் கழித்து வருகிறானென்றும் அவன் ஜப்பானுக்கும் தெற்கு அமெரிக்காவுக்கும் தப்பி ஓட முயற்சித்து வருகிறானென்றும், உருவத்தை மாற்றிக்கொண்டு காலியைப்போல் அவன் அலைந்து திரிகிறான் என்றும் சொல்லப்பட்டது. அடுத்தபடியாக கீர்த்தியுடன் இறப்பதற்காக பெர்லினிலேயே அவன் நின்று போராடி வருகிறானென்றும் சொல்லப்பட்டது. அவன் நீதி வழியிலிருந்து தப்ப முயலுகிறானென்று நினைத்தோம். இப்பேர்ப்பட்டவர்களுக்கு தூக்குமேடையும் அல்லது சுட்டுக்கொல்லப்படுவதும்தான் கதி. இப்பொழுது கொலையாளியான ஹிட்லரும், பொய்யனான கோயபல்ஸும் சுட்டுக் கொல்லப்பட்டார்களென்றும், ஹிட்லர் இறந்தான் என்பதற்கு அத்தாக்ஷியாக அவனுடைய சவத்தை நேசதேசத்தாரிடம் காண்பிப்பதாக ஹிம்லர் சொல்லுவதாகவும் சொல்லப்படுகிறது.

ஹிட்லர் உயிருடனிருந்தால் அவன் பெர்லின் தீக்கிரையாகும்படி அங்கு தங்கியிருக்க மாட்டானென்று தோன்றுகிறது. அவன் இல்லாதபோனால் அழிந்து போகக்கூடிய நாஸி எதிர்ப்பை நடத்த அவன் தப்பி ஓடியிருக்கவேண்டும். மேலும் ஹாம்லட்டைப் போல இறப்பதா அல்லது இருப்பதா? இறப்பதா அல்லது சரணடைவதா? என்று யோசித்துக் கொண்டிருக்கவேண்டும்.

வி வி வி வி வி

**பெர்லின் நொருங்கி வருகிறது.** ஹிட்லர் இறக்கவேண்டும் அல்லது சரணகதி செய்யவேண்டும். ஏனெனில் ஸ்வதந்திரத்துடன் வாழ அவனுக்கு ஒரு நம்பிக்கையும் கிடையாது. பெர்லின் சவக்காடாக இருக்கிறது. ஜலதாரைகளெல்லாம் சவங்களால் மூடப்பட்டிருக்கின்றன. நகரத்தில் இருக்கும் ஸ்பிரி நதியில் ஏராளமான பிணங்கள் அழுகிக் கிடக்கின்றன. பெர்லின் தீப்பற்றி எரிகிறது. பெர்லினின் மாகாணங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வீழ்ச்சி பெறுகின்றன. ருஷ்ய வளையம் நகரத்தைச் சுற்றி நெருங்கி வருகிறது.

வி வி வி வி வி

**தொடர்பு.** ஏப்ரல்மீ 26உயன்று லிப்ஸிக்குக்கு வடகிழக்கில் 30 மைல்களிலுள்ள டோர்காவில் ருஷ்ய-அமெரிக்கப்படைகள் சந்தித்து ஜெர்மனியை இரண்டு துண்டாகத் துணித்துவிட்டன. அமெரிக்க 69-வது டிவிஷனைச் சேர்ந்த கலிபோர்னியா வாசியான அமெரிக்க லெப்டினெண்டும், 58-வது ருஷ்ய கார்ட்ஸ் டிவிஷனின் ருஷ்ய ஸோல்ஜரும்தான் முதன் முதலில் எல்பி நதியின் குறுக்கேயுள்ள இரும்புப் பால மத்தியில் சந்தித்தார்கள். அவர்களுக்கு அளவுகடந்த சந்தோஷம் உண்டாயிற்று. மற்றொரு ருஷ்ய ஸோல்ஜர் சொன்னதுபோல அவர்களுக்குச் சந்தோஷமும் ஆச்சரி

யமும் குதூகலமும் ஏற்பட்டது. இந்த சந்திப்பு முக்கியமானது. இதற்காகத்தான் நேச தேசத்தார்கள் வெகு காலமாகப் பாடுபட்டுக்கொண்டிருந்தார்கள். ஜனவரி மாதம் 21-ம் தேதியன்று கிழக்கு, மேற்குப் போர்முனையிலுள்ள சேனைகள் 700 மைல்கள் தூரத்திலிருந்தன. இப்பொழுது சந்தித்த இடத்திலிருந்து ருஷ்ய சேனை 400 மைல்கள் தாண்டியிருந்தது. மேற்கு சேனைகள் 300 மைல்கள் தாண்டியிருந்தன. இந்த இடைவெளி மூடப்பட்டு விட்டது. ருஷ்ய சேனை ருஷ்யாவின் மத்தியிலிருந்து ஒரு நாளைக்கு 4 மைல்கள் வீதம் போலந்தின் வழியாக ஜெர்மனியின் மத்திக்கு 25 வாரங்களாக முன்னேறிற்று. மேற்குப் படைகள் கால்வாயைத் தாண்டியபின் தினசரி 3 மைல்கள் வீதம் நதிகள், காடுகள் மூலமாகவும் முன்னேறின.

இந்த வைபவத்தைக் கொண்டாட 324 பீரங்கிகள் 24 தடவை சுடவேண்டுமென்று ஸ்டாலின் உத்தரவிட்டிருக்கிறார். சர்ச்சிலும் ஜனாதிபதி ட்ரூமானும் விசேஷச் செய்திகளை அனுப்பியிருக்கிறார்கள்.

ஹிட்லர் பிழைத்திருந்தால் அவனுக்கு இந்தச்செய்தி ஹிருதயத்தைப் பிளக்கக்கூடியதாக இருக்கும். நாஸிகளின் கடைசி நம்பிக்கையும் போய்விட்டது. இரு போர் முனைகளுக்கு நடுவில் நசுக்கப்படுவோம் என்ற நாஸிகள் பீதி உண்மையாகி விட்டது. இனிமேல் மேற்குப் போர்முனை, கிழக்குப் போர்முனை என்ற பாகுபாடுகள் இருக்காது. ஒரே ஒரு போர்முனை ஜெர்மனியின் குறுக்கே காணப்படும்.

வி வி வி வி வி

**தெற்குக் கோத்தளம்.** ஹிட்லரின் கடைசி அரணான பவேரியா கோத்தளமும் நொருங்கி வருகிறது. அமெரிக்க 7-வது, 3-வது சேனைகள் மூனிக்குக்கு வந்து விட்டன. மூனிக் ராணுவ ரக்ஷணையற்ற நகரம் என்று சொல்லப்பட்டு விட்டது. பவேரியாவின் மிகப்பெரிய நகரங்களில் ஒன்றான ஆக்ஸ்பர்க் விழுந்து விட்டது. ஏப்ரல் மாதம் 25-ம் தேதியன்று பெர்கஸ்காடனிலுள்ள ஹாஸ்வாகன் பிலட் என்னும் ஹிட்லரின் வாஸஸ்தலத்தை 350 பிரிட்டிஷ் லங்காஸ்டர்கள் விமானங்கள் 12,000 ராத்தல்கள் எடையுள்ள வெடிகுண்டுகளால் தாக்கின.

வி வி வி வி வி

**வடக்குக் கோத்தளம்.** இதற்கும் அபாயம் ஏற்பட்டு விட்டது. பீல்ட் மார்ஷல் மாண்ட்காமரி பிரேமனையும், மார்ஷல் ரோகோஸொவ்ஸ்கி, ஸ்டெட்டினையும் பிடித்தபின் இரு தலைவர்களும் வடக்கில் சந்திப்பதற்காக முன்னேறிவருகிறார்கள்.

வி வி வி வி வி

**ஐரோப்பியத் துறைமுகங்களுக்கான போர்.** நடைபெறுகிறது. பால்டிக்கிலும் கால்வாய்க்கரையிலும் உள்ள துறைமுகங்களைக் கடந்து சென்று எதிரிகளை ஐரோப்பாவிற்குள் நுழையாமல் தடுத்து விடுவது என்ற ஜெர்மனியின் நம்பிக்கை அழிந்து வருகிறது. இன்று 40 துறைமுகங்களில் 20 ஜெர்மனி வசமிருந்து வருகின்றன. இந்தத் துறைமுகங்களில் பெர்லினுக்கான போரைப்போல் போர்கள் கடுமையாக நடக்கின்றனவாம்.

வி வி வி வி வி

**முடிந்தது.** ஏப்ரல் மாதம் 26-ம்தேதி யன்று காமன்ஸ் சபையில் ஜெர்மன் அவுட்வாண வெடிகுண்டுத் தொந்தரவு இங்கிலாந்தில் ஒழிந்தது என்று மிஸ்டர் சர்ச்சில் சொன்னார். அவை மறுபடியும் வருமா என்று கேட்கப்பட்டபொழுது என்னால் ஜோஸ்யம் சொல்ல முடியாதென்று அவர் பதில் உரைத்தார். 5 வருஷங்களுக்கு மேலாக தென்கிழக்கு இங்கிலாந்தும், விசேஷமாக லண்டன் பிரதேசமும் வெடி விமானங்களாலும், ஓட்டியில்லா விமானங்களாலும் அநேக கஷ்டங்களை அனுபவித்திருக்கின்றன. பிரிடனுக்கான போரில் தோல்வியுற்றபின் ஹிட்லர் கடைசி உபாயமாக மணிக்கு 1,800 மைல்கள் போகும் அவுட்வாணங்களைக்கொண்டு பிரிடனைத் தாக்கினான். முதலில் ரேடியோவினால் கண்ட்ரோல் செய்யப்பட்ட அவுட்வாணங்களை ஏவினான். அவைகள் கண்ட இடங்களில் விழுந்தன. அடுத்தபடியாக அவைகளிலுள்ள எண்ணெய் ஸப்ளையை குறிப்பான இடத்தில் வரும் பொழுது அற்றுப்போகும்படி செய்ய அவற்றில் ஒரு உபாயத்தை அமைத்தான். அவைகள் தாக்கிய வரையில் அபாரமான நாசத்தை விளைவித்தன. ஒரு வெடிகுண்டு 167 பேர்களுக்கு உயிர்ச்சேதம் ஏற்படுத்தியது. ஆகிலும் பிரிடனில் ஏற்பட்ட உயிர்ச்சேதமும் நஷ்டமும் சொல்பமானவைதான். அதன் மூலம் மகத்தான முறையில் நகரத்தைக் காலிசெய்யும் அவசியம் ஏற்படவில்லை. பிரிடனுக்கான போரை அனுபவித்த லண்டன் வாசிகள் எந்த கஷ்டத்தையும் அமைதியுடனும் தைரியத்துடனும் பொறுத்துக்கொள்ளுவார்கள்.

வடக்கு இதாலி பூராவிலும் கலகம் மூண்டு விட்டது. தேசாபிமானப்படைகள் கலகம் செய்ய ஆரம்பித்து விட்டன. பிரெஞ்சுப்படைகள் இதாலிக்குள் நுழைந்து விட்டன. ஸ்விஸ் எல்லைச்சரகத்தை நோக்கி முன்னேறிய நேசதேசப் படைகள் பாஞ்சுலா, லெரோனு, பெர்காமோ, பிரேசியா, ரேின் முதலியவற்றைப் பிடித்தன. மிலான் விழுந்து விட்டது. பிட்மாண்டிலும், லம்பார்டியிலும் போர் நின்று விட்டது. ஜெர்மானியர்கள் ஏராளமாக சரணடைந்து வருகிறார்கள். மாதாகோவில் மணிகள் சப்திக்கின்றன. பீரங்கிகள் சந்தோஷத்தை வெளிப்படுத்த குண்டுகளைப்போடுகின்றன.

வி வி வி வி வி

**முஸோலினி கொல்லப்பட்டார்.** பாஸிதத்வம் ஒழிந்தது. ஒரே நாசத்தால் முஸோலினியும் ராஜத்துரோகி அடையும் அதோகதியை அடைந்தான். அவனை தேசாபிமானிகள் கைதுசெய்து கொலைசெய்து விட்டார்கள். 1940-ம் வருஷத்தில் பிரான்ஸ் வீழ்ச்சி பெற்றபொழுது அதை அயோக்யத்தனமாக அவன் அடித்ததற்குப் பழிவாங்கியாகி விட்டது. ஈஸ்வரனின் சிக்ஷை மெதுவாகவும் ஆனால் உறுதியுடனும் விதிக்கப்படுகிறது.

வி வி வி வி வி

**பிதேயனின் கதியும்** இவ்விதமாகத்தானிருக்கும். விச்சியின் மாஜித்தலைவரான 89 வயது உள்ள அவர் மறுபடியும் பிரான்ஸுக்குக் கொண்டு வரப்பட்டு விசாரணைக்காக ஜெயிலில் அடைக்கப்பட்டிருக்கிறார். அவர் பேரில் எதிரியுடன் ஒத்துழைத்தாரென்றும், பிரெஞ்சு பிரிடிஷ் ஒப்பந்தத்துக்கு முரணாக அவர் யுத்த நிறுத்த உடன் படிக்கை செய்து கொண்டாரென்றும், அதனபின் பிரெஞ்சு ஐச்வர்யங்களை ஜெர்மனிக்கு அனுப்பி உதவியளித்தாரென்றும், நஷ்ட ஈடு கொடுத்தாரென்றும், ராஜத்ரோகக் குற்றங்கள் சாட்டப்பட்டிருக்கின்றன. பிரான்ஸ் அதிகமான கஷ்டத்துக்குள்ளாகக் கூடாதென்று உத்தேசித்து அவர் அவ்விதம் செய்ததாகவும், டார்லான் மூலமாக அவர் நேசதேசத்தாருடன் ஒத்துழைத்ததாகவும், டிகால் பிரான்ஸுக்கு வந்தபொழுது அவரிடம் அதிகாரத்தை மாற்ற அவர் தயாராக இருந்ததாகவும், கடைசியில் அவர் ஜெர்மானியர்களால் பலவந்தமாகக் கொண்டுபோய் முதலில் பெல்போர்டிலும் பிறகு ஜெர்மனியிலும் விச்சி நிர்வாகத்தை அமைக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டாரென்றும் அவர் சக்ஷி சொல்லுகிறார்.

வி வி வி வி வி

**ஐரோப்பாவின் கஷ்டநிஷ்டூரங்கள்.** நாஸிகளின் நாசவேலை மூலமாக ஐரோப்பாவில் பஞ்சமும் துயரமும் அதிகரித்து விட்டது. பொருளாதார ஒழுங்கை அமைப்பது இப்பொழுது நேசதேசத்தாரின முக்கியமான அலுவல். காப்டன் லிட்டிலடன் சொன்ன பிரகாரம் பொருளாதார அமைதியன்னியில் பத்திரமான சமாதானம் இருக்க முடியாது. ஐரோப்பிய ஜனங்களுக்கு சமாதானமும் உணவுப்பொருளும், ஆடைகளும், வேலையும், விடுதிகளும் தேவை. ரூர் பிரதேசத்தையும் ஸாரையும் விடுவித்த போதிலும் ஐரோப்பாவில் அநேக காலம் வரைக்கும் நிலக்கரி கிடைக்காது. ஏனெனில் அந்த பிரதேசங்களை நேசதேச வெடி விமானங்களும், பீரங்கிகளும் அழித்தது அல்லாமல் நாஸிகளும் பொசுக்கு வேலையைச் செய்திருக்கிறார்கள்.

வி வி வி வி வி

**பூசன் வால்ட், ஹூசன் வால்ட், நார்ட்ஹாஸன், பெல்ஸன், டாகா.** இந்தப் பேர்களைச் சொன்னமாத்திரத்தில் அருவருப்பும் துக்கமும் உண்டாகுகிறது. இவைகள் காவல் முகாம்கள் என்ற பேர் உள்ள நகரங்கள். ஜெர்மானியர்கள் கொலை, கொடுந்துன்பம், அங்கவைகல்யம், இரக்கமின்மை முதலியவற்றை பரிஷ்காரமாக நடத்திவந்தார்கள். அவர்களுக்கு உதவியாக விஞ்ஞான சாஸ்திரமும் புதைகுழிகளையும், சாவு அறைகளையும், சாவைஉண்டுபண்ணும் முறைகளையும் மற்ற அவாச்யமான காரியங்களையும் செய்து கொடுத்தது. இவைகள்தான் நாஸிகளுடையவும் நார்டிக் ஜாதியாருடையவும் கலைஞான உற்பத்திகள். இதற்காகத்தான் ஹிட்லர் பாடுபடுகிறார் என்று கோயபல்ஸ் கொஞ்ச காலத்துக்குமுன் சொல்லியிருக்கிறான். ஜெர்மனிக்குள் அமெரிக்கர்கள் முன்னேறும்பொழுது இந்தக் கொடுமைகள் வெளிப்படுகின்றன. ஒளிப்படங்கள் மூலம் நாஸிகளின் அக்கிரமங்களின் வியாபகமும் தன்மையும் உலகத்தாருக்கு வெளிப்படுத்தப்படுகிறது. இந்த அக்கிரமங்கள் காணப்படும் பிரதேசத்தை பிரிடனின் இரண்டு சபைகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் வந்து பார்க்கவேண்டுமென்று ஜெனரல் ஈசன்ஹவர் ஒரு அழைப்பு அனுப்பியிருக்கிறார். அவர்கள் அவ்விதம் பார்வையிட்டபின் "இந்த முகாம்கள் மனிதவர்க்கம் அடைந்திருக்கும் கேவலமான தன்மையை வெளிப்படுத்துகிறது." என்று ஒன்றுபட்ட அபிப்ராயத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அவர்களின் கதை கர்ணகடோரமாக இருக்கிறது. ஒரு இடத்தில் 51,572 பேர்கள் கொலை செய்யப்பட்டார்கள். ஸ்திரிகள்

முதலில் விபசாரம் செய்யும்படி சட்டாயப்படுத்தப்பட்டார்கள். அதன்பின் அவர்கள் கொலை செய்யப்பட்டார்கள். மனிதர்களின் தோல்களைக்கொண்டு அழகிய சாமான்களைச் செய்தார்கள். மனிதர்களைக் கொல்ல பெரிய தடிகள் உபயோகிக்கப்பட்டன. அறுதுறையாக உயிருள்ளவர்கள் விஞ்ஞான சாஸ்திர முறையில் மருந்துமூலம் கொல்லப்பட்டார்கள்.

இந்த சாவுப் பொறிகளிலிருந்து தப்பி ஓடிவந்த அநேகர்கள் இந்த அக்கிரமங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஆகிலும் நாம் அவைகளை ஒரு சிறிது சலுகையினாலும், ஒரு சிறிது மனித இயல்பின் கௌரவத்தினாலும் எளிதில் நம்பவில்லை. ஆனால் பிரிட்டிஷ் தூது கோஷ்டியார்கள் வெளியிட்டதிலிருந்து சந்தேகம் நிவர்த்தியாகிவிட்டது. வறுமைக் குள்ளாக்குவதும், துன்புறுத்துவதும், வியாதிகளை பரவச்செய்வதும் உண்மையாகிவிட்டன. இந்த அக்கிரமம் அஞ்ஞானம் மிகுந்த யுகத்திலிருந்த ஜாதியார்களிடமும் காணக்கூடிய வைகளைவிட இழிவானவை.

ஜெனரல் ஈசன்ஹவர் மற்றொரு நல்ல வேலையை செய்திருக்கிறார். இந்தக் கொலை முகாம்களைச் சுற்றியுள்ளவர்கள் இந்த முகாம்களைப் பார்வையிட்டு, அவர்களின் சார்பாகவும் நாகரீகம் என்ற ஆடம்பரத்துடன் அவர்களின் நிர்வாகிகள் என்ன அக்கிரமங்களை செய்திருக்கிறார்கள் என்றும் இந்த நரகம் போன்ற விடுதிகளும், புதைகுழிகளும் எதை வெளிப்படுகின்றனவென்றும் அறிந்துகொள்ளவேண்டுமாம். மனிதனுக்கும் ஈச்வரனுக்கும் அறுவருப்பை உண்டாக்கக்கூடிய வகையில் அவர்கள் அடைந்திருக்கும் கேவலத்தை அவர்கள் உணர்ந்தால்தான் அவர்களைச் சீர்திருத்தும் கல்வி ஆரம்பிக்கப்படலாம். அப்பொழுதுதான் ஜெர்மனியின் புனருத்தாரணம் ஆரம்பமாகும். ஆனால் ஜெர்மனிக்குப் புத்திவருமா. வருமென்று நாம் நம்புகிறோம்.

வி வி வி வி வீ

**ஸான் பிரான்ஸிஸ்கோ.** ஜெர்மனியின் மத்தியில் நேசதேசப்படைகள் கூடியது போல் நேசதேசத்தார்கள் சான் பிரான்ஸிஸ்கோவில் அதிருஷ்ட வசத்தோ அல்லது முன்னேற்பாட்டினாலோ ஒன்றுகூடியிருக்கிறார்கள். மகாநாடு ஏப்ரல் 26-ம் தேதி துவங்கியது. 200 பிரதிநிதிகள் வந்திருக்கிறார்கள். ஒருவரை ஒருவர் சந்தித்துப் பேசுவதற்கும் அபிப்பிராயங்களை பிரசுரம் செய்வதற்கும் புத்தகசாலைகளும், வாசகசாலைகளும், மொழிபெயர்ப்பாளரும், பாஷாஞானமுள்ளவர்களும், தர்ஜிமா செய்கிறவர்களும், தொழிற்பயிற்சி ஆலோசகர்களும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. 1,200 பத்திரிகை பிரதிநிதிகள் அங்கு மகாநாட்டின் நடவடிக்கைகளை ரிபோர்ட் செய்ய வந்துள்ளார்கள்.

மகாநாடு நல்லுணர்ச்சியுடனும் பரஸ்பர சகிப்புத்தன்மையுடனும் கூடியிருக்கிறது. ஸ்டெட்டினிஸ்ல் ஸ்டியரிங், செயல் கமிட்டியின் நிரந்தரமான தலைவராக இருப்பாரென்றும், நான்கு பெரிய வல்லரசுகளின் பிரதிநிதிகள் மாறிமாறி மகாநாட்டில் அக்கிராசனம் வகிப்பார்களென்றும் ஈடன் சொன்னதை எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள். ஸ்டியரிங் கமிட்டியின் முடிவுப்படி மகாநாட்டிலிருந்து வார்ஸா விலக்கப்பட்டது. வெண்மை ருஷ்யாவும் யூக்ரேனும் சேர்த்துக்கொள்ளப்பட்டன. ஜனாதிபதி ட்ரூமான் மகாநாட்டிற்கு ஒரு செய்தி அனுப்பியிருக்கிறார். "கட்டுப்பாடுசெய்யாமல் விட்டுவிட்டால் நவீன யுத்தம் நாகரீகத்தையும் இறுதியில் அழித்துவிடும். உலகத்தில் நியாயம்தான் அபார சக்தியாக இருக்கிறது. தனித்துநிர்க்க முடியாதென்று மனிதன் கண்டுபிடித்துவிட்டான். நாம் யுத்தத்தில் ஒன்றுபட்டு உயிர்துறக்க பிரியப்படாவிட்டாலும் நாம் சமாதானத்துடன் ஒன்றுவாழ கற்றுக்கொள்ளவேண்டும். இந்த அற்புதமான அபிப்பிராயங்களை செயல் ஸ்தாபனங்களை அமைப்பதின் மூலம் மகாநாடு நிறைவேற்றவேண்டும். அமெரிக்கா பிரதிநிதி என்ற ஹோதாவில் மிஸ்டர் ஸ்டெட்டினியஸ் மகாநாட்டைத் திறந்துவைத்தார். அதன்பின் ஈடன் பின்வருமாறு பேசினார். "நாம் பூர்ணமான ஆமோதனம் ஏற்படுமென்று எதிர்பார்க்கக்கூடாது." ஜெனரல் ஸ்மட்ஸ் அதைப்பற்றிப் பின்வருமாறு சொல்லுகிறார். "ஸான் பிரான்ஸிஸ்கோ மகாநாடு யுத்தத்தின் இறுதிப்போர். இங்குதான் யுத்தத்தின் பெரிய வெற்றி ஏற்படும். இது வெற்றிகரமாக முடியாவிடில் நாம் வீணாகப்போர் புரிந்தவர்களாக ஆகிவிடுவோம்." சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டில் இந்திய பிரதிநிதியான ஸர் A. ராமஸ்வாமி முதலியாரும் பலஹீனமான நாடுகளின் சார்பாகப் பின்வருமாறு பேசினார்.

"அரசியல் உரிமைகளை நான் நம்புகிறேன். ஆகிலும் தனித்து நிற்பதைவிட பிறரை நம்பி வாழ்வது சிறந்ததென்று நினைக்கும் கட்டம் இப்பொழுது வந்துவிட்டது. சிறியநாடுகள் பெரிய வல்லரசுகளுக்குத்தான் பொறுப்பு என்று உணரும்பொழுது காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கும் பொறுப்பளிக்கப்பட வேண்டும். ஆபத்து காலத்தில் உதவி செய்த சிறிய தேசங்களும் பத்திரத்தைப் பரிபாலிப்பதில் உதறித் தள்ளக்கூடிய அம்சங்கள் இல்லை

யென்று சொல்லுகிறேன். அக்கிரமப் போரை நடத்த பலாத்காரத்தை உபயோகிப்பதுதான் நல்ல முறை என்று நாம் நினைக்கும்பொழுது அக்கிரமப் போருக்குக் காரணமான பொருளாதார, ஜனசமூக அநீதியை அடிப்படையாகக்கொண்ட சில மூலாதாரமான பிரச்னைகளை நாம் மறந்துவிடக்கூடும்."

வி வி வி வி வி

**பிரிடனின் 1945—1946-ம் வருஷத்திய வரவு செலவு திட்டம்.** ஸர் ஜான் ஆண்டர்ஸன் இவ்வருஷத்தில் வருமானம் £4,500, மிலியன்கள் என்றும், £5,565 மிலியன் செலவாகும் என்றும் தூரக்கிழக்குப் போர் அதிகரிக்கும்பொழுது செலவு அதிகரிக்குமென்றும் சொல்லியிருக்கிறார். இந்த வரவு செலவு திட்டத்தில் மாறுதல் ஒன்றுமில்லை. புதிய வரி விகிதங்களுமில்லை. யாதொரு கஷ்ட நிவாரணமும் இல்லை. செலவு அதிகரித்திருக்கிறது. ஆகிலும் உபரிச் செலவு, வருமான வரி, அமித லாபவரி, தேசீயசேமிப்பு மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு ஈடு செய்யப்பட்டிருக்கிறது. தனிப்பட்டவர்களின் வருமானத்தில் 42 சத விகிதம் நிர்வாக உபயோகத்துக்கு மீதப்படுத்தப்பட்டிருக்கிறது. செல்வப் பெருக்கு ஏற்படாமல் கண்காணிப்பு செய்யப்படுகிறது. வாழ்க்கை முறையின் அளவு சென்ற வருஷம் 129 ஆக இருந்தது, இவ்வருஷம் 130-ஆக இருந்து வருகிறது. கிரின்வுட் சொன்னபிரகாரம் "பிரிடன் யுத்தத்தினால் கெட்டுப்போய்விட வில்லை. அது நல்ல காலத்திற்காகத் தயார் செய்யப்பட்டுவிட்டது."

வி வி வி வி வி

**இறந்தபின் கௌரவங்கள்.** இறந்த ஜனாதிபதி ரூஸ்வெல்டுக்கு அமெரிக்கஜன பிரதிநிதி சபைகள் கௌரவங்களை வழங்கியிருக்கின்றன. ஜூடிஷியரி கமிட்டியின் சிபார்சின்பேரில் விக்டோரியா கிராஸுக்கு சமானமான காங்கிரஸின் கௌரவப் பதக்கத்தை "ஜனாதிபதியின் ஒப்பற்ற சேனாதிபத்யத்துக்கும், புதிய சுதந்திர எல்லைகளை வரையறுத்த அவருடைய தீரத்திற்கும், தேச சேவையில் அவர் தீரத்துடனும் தன்னலமறுப்புடனும் ஈடுபட்டதற்கும், உலக சமாதானத்திற்கு நிரந்தரமாக அவர் செய்திருக்கும் பேருதவிக்கும்" அவருக்கு சபை அளித்திருக்கிறது. இந்த கௌரவத்தை ஜனாதிபதிகளில் அவர்தான் முதல் முதலில் பெற்றிருக்கிறார்.

---

# நாஸித் தலைவர்களின் கதி என்ன ஆகும்?

**வெர்னன் பார்ட்லட்.**

நாஸித் தலைவர்களின் அநேகரைச் சந்தித்து அவர்களின் குணாதிசயங்களை ஆராய்ச்சி செய்து வந்திருக்கும் வெர்னன் பார்ட்லட் இந்தக் கட்டுரையில் அவர்களின் முடிவைப்பற்றி ஊகித்துச் சொல்லுகிறார். இது ந்யூஸ்கிராணிகளின் ஏப்ரல் 6-ம் தேதி பதிப்பில் வெளி வந்தது.

நாஸித் தலைவர்களின் கதி என்ன? இது முதல் அவர்களைப்பற்றி அநேக வதந்திகளை நாம் எதிர்பார்க்கலாம். இருபது வருஷங்களுக்குமுன் முஸோலினிக்கு அநேக வியாதிகள் ஏற்பட்டிருக்கின்றனவென்றும், ஒரு வருஷத்திற்குள் இறந்து விடுவாரென்றும் நாம் கேள்விப் பட்டோம்.

கோயபல்ஸ் வசித்த குருனவால்டுக்கருகில் ஒரு மோட்டார்காரின் பேரில் சுட்ட இருவர்களைக் கைது செய்ய ஜெர்மன் நிர்வாகம் பரிசு வழங்கியிருப்பதால், கோயபல்ஸே இறந்து விட்டானென்று முடிவு செய்யப்படுகிறது. இவ்வளவு முக்கியத்துவமுள்ள நாஸி மோட்டார் ஸைகிள்களில் செல்லும் கருப்புச் சட்டைபோட்ட கொள்ளைக்கூட்டத்தாரின் துணையன்னியில் பிரயாணம் செய்திருக்கமாட்டானென்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள்.

மதித்துச்சொல்ல முடியாவிட்டாலும், ஜோஸ்யம் சொல்லலாம். ஏனெனில், இந்தத் தலைவர்களின் குணாதிசயங்கள் நமக்குத் தெரிந்தவைகள் தான்.

1923-ம் வருஷத்தில் முனிக்கில் நடைபெற்ற பீர் அரை புரட்சியில் பலமாகக் காயம் பட்ட கோயரிங் மலைப் பிராந்தியத்தைத் தாண்டி சௌக்யப்படுத்திக்கொள்ளுவதற்கும் தேச பிரஷ்டம் செய்யப்படுவதற்கும் திருட்டுத் தனமாகக்கொண்டு போகப்பட்டான். இந்தத் தந்திரத்தையே அவன் இப்பொழுதும் கையாளுவான். ஏனென்றால் அவனுக்கு வாழ்க்கையில் அதிக ஆசையிருப்பதினால் அவன் உயிரை தியாகம் செய்யமாட்டான்.

கோயபல்ஸ் இறுதி வரையில் போரை நடத்தி உயிர்துறப்பான். பலமான குண்டுவீச்சேற்பட்ட அரங்கங்களில் சென்று அவன் தான் தாது புஷ்டியுள்ள வார்த்தைகளைச் சொல்லி

வந்தான். நாஸிதத்வத்தில் அவனுக்கு அதிக நம்பிக்கையிருந்ததால் தான் அவன் அவ்விதம் செய்ய முடிந்தது. என்னிலைமையிலும் அவனுக்குள்ள காலின் அமைப்பு அவன் மறைமுகமாகத் தப்பி ஓடும் சந்தர்ப்பத்தைக் குறைத்துவிடும்.

டாக்டர் லே என்பவர் மதுபான வெறியிலே போரில் பிராணனை இழந்துவிடுவார்.

ரிப்பன் டிராப் முரட்டு சுவபாவமும் அகம்பாவமும் உள்ளவன். அவருக்கு போல்ஷீவிதத்திலிருந்து தான் பீதி உண்டு. கடைசி வரையில் பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும், ருஷ்யாவுக்கும், மனஸ்தாபத்தை உண்டு பண்ணிவிடலாமென்று அவன் நம்பியிருக்கிறான். சில வருஷங்களுக்கு முன் ருடால்ப் ஹெஸ்ஸும் இவ்விதம் தான் நம்பியிருந்தான்.

எனவே, அவன் நேசதேசத்தாரிடம் கைதியாகி மற்ற ஜெர்மானியர்களைவிட சிறந்த முறையில் நடத்தப்படவேண்டும் என்றும், அதன் மூலம் சிக்ஷைக்குட்படாமல் தப்பித்துக் கொள்ளலாமென்றும் நினைக்கலாம். ஹிம்லரை நான் சந்தித்ததில்லை. இரண்டு வருஷங்களுக்கு முன் அவன் விமான மூலம் ஸ்பெயின் வழியாக ஆர்ஜண்டைனுக்கு ஓடிவிடுவானென்று தினசரிக் குறிப்பில் எழுதியிருக்கிறேன.

அவன் ஒரு சிறிய உருக்கமான கொள்ளைக் கூட்டத்தைக்கொண்டு எதிர்ப்பான் என்றும் தோன்றுகிறது. வெறிபிடித்த நாய்களைச் சுட்டுக்கொல்லுவது போல அவர்களை ஒழித்துவிடவேண்டும்.

ஹிட்லரின் சங்கதி என்ன? அவன் புத்திசாலியாக இருந்தால் ஓடி ஒளிந்துகொள்ளுவான். அவ்விதம் செய்தால், தான் அவனுடைய மறைவின் மர்மம் வாலிபர்கள் நம்பும்படியாக புராணக் கதையாக மாறிவிடும். அல்லது துருப்புகளுக்குத் தலைமை வகித்து அவன் உயிர்துறக்கலாம்.

மற்றொரு நடவடிக்கையும் சம்பாவிதம் தான். அவனுக்கு அதிக பிரியமுள்ள மலைகளில் சென்று தற்கொலை செய்து கொண்டான் என்றும், நாம் ஒரு நாள் கேள்விப்படலாம். இந்த தற்கொலை, ஹிட்லர் உபயோகமுள்ள வகையில பயன்படுத்திய கோரமான ஜெர்மன் கூட மதத்துக்கு ஒத்தது தான்.

அல்லது அவன் மீசையை எடுத்துவிட்டு ஒரு வருஷம் ஒளிமறைவாக இருந்து பிறகு, அவனை ஒருவரும் ஸ்தோத்திரம் செய்யாததிலும், அவன் அதிகாரம் வகிக்காததினாலும் தற்கொலை செய்துகொள்ளுவானோ?

மற்றவர்களான ஷிராக்குள், பார்ஸ்டர்கள், வாக்னர்கள், பிராங்குகளில் அநேகர் சொல்லப்படுவார்கள். சிலர் போலி தாடிகளுடனும், போலிப் பெயர்களுடனும் தப்பி ஓடிவிடுவார்கள். சிலர் நேசதேசத்தாரிடம் சரண் புகுந்துவிடுவார்கள். ஏனென்றால் அவ்விதம் செய்தால் தான் அவர்கள் ஜெர்மானியர்களின் கோபத்திலிருந்து தப்பித்துக்கொள்ளலாம்.

நாஸிகள் வெற்றி பெற்றுவந்தபொழுது குதூகலமாக அவர்கள் வரவேற்ற தலைவர்களையே ஜெர்மானியர்கள் கொன்று விடுவாகள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

என்னுடைய ஜோஸ்யத்துக்கு ஒரு ஷராமட்டும் சொல்லுகிறேன். ஏற்கனவே பலமாக உள்ள கக்ஷிக்கலவரத்தில் நாஸிகள் எவ்வளவு தூரம் ஒருவரை ஒருவர் கொன்றுவிடுவார்கள் என்பதை ஒருவரும் சொல்லமுடியாது.

சென்ற ஜூலை மாத முயற்சிக்குப்பின் ஹிட்லர் அவனுக்கு ஆப்த்தமான நண்பர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்களையும், சந்தேகத்துடன் கவனித்து வரவேண்டும். பூரரின் உத்தரவுப்படி வியன்னாவில் சமஷ்டி விடுதியில் கல்வி அரையில் டால்பஸ் கொலை செய்யப்பட்டதுபோல் ஹிட்லருடைய அரையிலே அவன் ஸோபாவில படுத்திருக்கும்பொழுது அவனை எவரும் கொன்றுவிடலாம்.

---

# ஜெர்மனி ஏன் சரணடையவில்லை?

## இது எப்பொழுது முடியும்?

**விக்டர் தாம்ஸன்** (டெயிலி ஹெரால்டின் யுத்த நிருபர்).

நான் சந்தித்துப் பேசிய ஒவ்வொரு நேசதேச ஸோல்ஜரும், ஜெனரல் முதல் ஸோல்ஜர் வரையில், "எதிரி ஏன் போரை முடித்துவிடவில்லை. ஏன் சரணடையவில்லை" என்று சொல்லுகிறார்.

144430

எல்லோரும் அவ்விதம்தான் கேட்கிருர்களென்று நினைக்கிறேன். ஜெர்மனியின் ராணுவ நிலைமையை கவனிக்கும்பொழுது, அது எதிர்த்துப்போராடுவது முட்டாள்தனமாகத் தோன்றுகிறது. மேற்கில் அதனுடைய நகி தற்காப்புகள் நொருங்கிவிட்டன. ரைன், எம்ஸ், வேஸர், ஆலர், எல்பி, நதிகள் ஊடுருவிச் செல்லப்பட்டன. போர் ஆரவாரம் ஏற்கனவே பெர்லினில் கேட்கப்படுகிறது.

ஜெர்மனியின் தற்காப்பு அரணை எந்த இடத்திலும் தற்காப்பு செய்ய ஜெர்மன் கடற்படை, விமானப்படை, ஹிட்லர் யுவர்கள் எல்லோரையும் சேர்த்துக்கொண்டாலும் பாதிபலமிருக்காது.

போரைத் தொடர்ந்து நடத்துவதினுல் ஜெர்மனியின் அதிகமான பாகங்கள்தான் அழிக்கப்பட்டு பொட்டலாகிவிடும். ஏராளமான ஜெர்மனியர்கள் நிர்மூலமாக்கப்படுவார்கள். ஆகிலும் நொருக்கப்பட்ட ஜெர்மன் சேனையின் பாகங்கள் இன்னும் எதிர்த்துப் போராடு கின்றன. காரணம் என்ன?

இதற்கு ஒன்று அல்ல அநேக விடைகளிருக்கின்றன. ஜெர்மனியின் ராணுவ அதிகாரிகள் முடிவுக்கு வந்திருந்தால் சரணுகதி ஏற்கனவே ஏற்பட்டிருக்கும். ஹிட்லரைக் கொல்ல ஜெர்மன் ஜெனரல்கள் சென்ற ஜூலையில் சதி செய்தபொழுதே இது சம்பவித்திருக்கும். அதற்குப்பின் ஹிட்லரும், ஹிம்லரும், மற்ற நாஸித்தலைவர்களும்தான் முடிவுக்குவரமுடியும். அவர்களில் பெரும்பான்மையோர் அதிகத் துணிவுள்ளவர்கள். யுத்த நிறுத்தம் ஏற்பட்ட உடன் அவர்களுக்கு ஹானி ஏற்படுமென்று அவர்கள் அறிவார்கள். தாங்கள் இன்னும் கொஞ்சகாலம் பிழைத்திருக்கத்தான் அவர்கள் போரை நடத்திவருகிருர்கள்.

மற்றவர்கள் நாஸி தத்வம் என்ற குறளி மதத்தில் ஆழ்ந்த அபிமானமுள்ளவர்கள். அவர்களும் இறுதிவரையில் போரை நடத்த பிரியப்படுகிருர்கள். அவ்விதம் செய்தால்தான் ஐரோப்பா பூராவையும் குழப்பத்தில் ஆழ்த்திவிடலாமென்று அவர்கள் நம்புகிருர்கள். அதாவது மிலியன்கள் கணக்கான ஜனங்கள் கஷ்டங்களை அனுபவிக்கவேண்டும். வறுமைக்கு உள்ளாகவேண்டும். நாஸி தத்வம் அவைகளைத்தான் அடிப்படையாகக்கொண்டது. குழப்பமாக உள்ள ஐரோப்பாவின் ஆதிக்கத்தை நேசதேசப்படைகள் இழந்துவிட்டால் நாஸி தத்வம் புத்துயிர் பெற்றுவிடும்.

மற்ெருரு காரணமும் உண்டு 1940-ம் வருஷத்தில் ஜெர்மனி பிரிடனைப் படையெடுத்தது என்றும் நமது சொல்பமான சேனை நொருக்கப்பட்டதென்றும் எஞ்சிய படைகள் சிதறுண்டு இருந்தனவென்றும் வைத்துக்கொள்ளுவோம். பிரிடன் போரை நிறுத்தியிருக்குமா? நிச்சயமாக நிறுத்தியிருக்காது. நாம் போரை நடத்தியிருப்போம். ஏனெனில் போரை நிறுத்தும் வரையில் ஒருவரும் முறிபட்டதாகக் கருதப்பட முடியாது. மேலும் யுத்தத்தில் எதிர்பாராதவைகள் நடக்கலாம். நமக்குப்போரை நடத்த சாம்ராஜ்யத்தில் மற்ற பாகங்கள் இருந்தன. நாஸிகளுக்கும் பவேரியாவிலுள்ள அரண்களிருக்கின்றன. அவர்களும் அற்புதங் களை நம்பியிருக்கிருர்கள்.

சுருக்கமாகச் சொன்னுல் "நமக்கு எப்பொழுது உதை விழுமென்று தெரியாது என்று" நாம் மட்டும் நினைக்கக்கூடாது. சாதாரண ஜெர்மானியர்களைக் காட்டிலும் நாஸிகள் இந்த அபிபிராயம் கொண்டிருக்கிருர்கள். கைது செய்யப்பட்ட அநேக ஜெர்மன் குடைத் துருப்புகள் ஹிட்லர் முடிவில் எல்லாவற்றையும் இனிதாகச்செய்து விடுவாரென்று என்னிடம் சொல்லியிருக்கிருர்கள். இது அசட்டு தைரியமில்லை. அவர்களுக்குப் பூர்ண நம்பிக்கை உண்டு. இவ்விதமாக நம்பும்படி அவர்களுக்கு வாலிபத்திலிருந்தே பயிற்சி ஏற்பட்டிருக்கிறது.

நாஸிகளின் மனப்பான்மை இதுதான். ஆகிலும் சாதாரண ஜெர்மன் ஸோல்ஜர் 100 சதவிகிதம் நாஸியல்ல அவன் சிறந்த கீழ்படியும் தைரியம் பொருந்திய ஸோல்ஜர். சென்ற யுத்தத்தைப்போல இந்த யுத்தத்திலும் நாசம் வரும்போல் தோன்றினுல் உடனே ஓடி விடுவான். இப்பொழுது ஜெர்மன் ஸோல்ஜர்கள் தனிப்பட்ட முறையிலும் கூட்டம் கூட்டமாகவும் யுத்தத்திலிருந்து விலகிக் கொள்ளுகிருர்கள்.

வரிசை வரிசையாகவுள்ள கைதிகளின் ஒளிப்படத்தைப் பாருங்கள். வெண்மைக் கொடியுடன் எவ்வளவு பட்டாளங்களும், கம்பெனிகளும், வந்துவிட்டனவென்று வாசியுங்கள். அவர்களில் அநேகர் இன்னும் சிறிது காலம் போரை நடத்தியிருக்கக்கூடும். அவர்களின் ஆபீஸர்களின் மனஉறுதி குலைந்திராவிட்டாலும், அல்லது அவர்களைச் சுட்டுக்கொல்ல

S. S. படைகள் வந்திருந்தாலும், அவர்கள் இன்னும் சில காலம் போரை நடத்தியிருப்பார்கள். அதாவது, சரணாகதியடைய நிர்ப்பந்திக்கும் பீதிதான் ஜெர்மன் துருப்புகளைப் போரை நடத்தும்படி தூண்டுகின்றன. அவர்கள் போரை நிறுத்தினால் அவர்களை ஜெர்மானியர்களே கொன்றுவிடுவார்கள். போரை நடத்தினால் நாம் அவர்களைச்சுட்டு கொன்றுவிடுவோம். இதுதான் அவர்களின் துர்தசை. உயிருக்கு மன்றாடிக்கொண்டே அவர்கள் வாழ்நாளைக் கழித்து வருகிறார்கள்.

ஏற்கனவே முறிபட்ட சேனை கொஞ்சம் கொஞ்சமாக நொருங்கி வருகிறது. நாஸி தத்துவத்தின் மத்யபாகம் இருக்கும் வரையில் அதன் வெளிபாகங்கள் நொருக்கிக் கொண்டேவரும்.

அதற்குள் நேசதேசத்தார்கள் யுத்த நிறுத்தம் செய்து விடுவார்கள். எஞ்சியுள்ள நாஸிகள் வெறிபிடித்த பூரரைச் சுற்றிக்கொள்ள மலைகளுக்கு ஓடிவிடுவார்கள். அங்கு மறுபடியும் ஒரு துடைப்புவேலை நடைபெறவேண்டும்.

போரின் இறுதித்தாக்குதல் ஆரம்பிக்குமுன்னரே வெற்றிதினம் வந்துவிடும். அதற்கு முன் ஜெர்மன் சேனையின் பெரும்பாகம் சரணாகதி செய்யவேண்டும்.

---

# உயிருள்ளவர்களும், இறந்தவர்களும் ஒரே இடத்தில் கிடந்தார்கள்.

## நார்ட்ஹாஸனில் ஜெர்மானியரின் அக்கிரமம்.

ஒவ்வொன்றாக காவல்முகாம்களை முன்னேறும் நேசதேசப் படைகள் விடுவித்துவரும்பொழுது நாஸிகள் செய்துவந்த கோரமான அக்கிரமங்களைப்பற்றி கண்ணோக்காளர்கள் ருஜுவை சமர்ப்பிக்கிறார்கள். நார்ட்ஹாஸன் நிலமையைப்பற்றி இந்த விவரங்கள், டெயிலி ஸ்கெச்சிலும், நியூஸ் கிரானிகள் பத்திரிகையிலும், டெயிலி ஹெரால்டிலும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

வெளிப்படைத் தோற்றத்தில் நார்ட்ஹாஸன் சாதாரணமான ஜெர்மன் நகரம்தான். அதை நமது வெடி விமானங்கள் பலமாக அழித்திருக்கின்றன. ஆகிலும் அதைச் சுற்றி இரண்டு மணி ஆராய்ச்சி செய்தால் ஜெர்மானியரின் காட்டுமிராண்டித்தனத்தையும், கடோரமான நெஞ்சத்தையும் காண்பிக்கக்கூடிய சின்னங்கள் காணப்படும்.

இந்த நகரத்திற்குள் அமெரிக்கர்கள் சில நாட்களுக்குமுன் நுழைந்தார்கள். அவர்கள் பெரிய விமான உற்பத்திசாலைகளையும் படை முகாம்களையும் கண்டார்கள். அங்குதான் பறக்கும் வெடிகுண்டுகள், வெடிக்கும் பாகம் தயாரிக்கப்பட்டு வந்தது. பாக்கியுள்ள எதிர்ப்பைக் குலைப்பதற்காக அவர்கள் தொழிற்சாலைக்குள் நுழைந்தார்கள். அங்கு நூற்றுக்கணக்கான வறுமைக்குட்பட்ட ஆடவர்களும், ஸ்திரீகளும், அடிமை வேலைக்காரர்களும், பொட்டல்களிலும், அறைகளிலும் படுத்திருப்பதைக் கண்டார்கள். அமெரிக்கர்களின் வருகையைக் கேட்டு ஜெர்மன் ரக்ஷகர்கள் ஓடியது முதல் இரண்டு வாரங்களுக்கு மேலாகவே அவர்கள் அங்கு கிடக்கிறார்கள். உயிருள்ளவர்களும், இறந்தவர்களும், ஒரே படுக்கையில் படுத்துக்கொண்டிருந்தார்கள். ஒரே படுக்கையில் மூவர்களும், சிலவற்றில் இருவர்களும் இருந்தபோதிலும் அவர்களின் சரீரம் இளைத்துப்போயிருந்ததினால் இன்னும் இடம் பாக்கியிருந்தது. கண்ணோக்காளர் ஒரு அறையைத் திறந்தார். இரண்டு ஜோடிக் கண்கள் அவரை நோக்கின. அவருடைய சரீரம் மிகவும் மெலிந்து போயிருந்தது. அவர்களுக்கு சரீரமில்லையென்றே சொல்லலாம். அவர்களுக்கு ஒரு கோப்பை குழம்பும், எட்டு அவுன்ஸ் ரொட்டியும், ஒரு சிறிய மார்கரியின் துண்டும்தான் ஆகாரமாகக் கொடுக்கப்படுகிறது. இந்த ஆகாரத்துடன் ஒரு நாளைக்கு 12-மணி நேரமும், ஒரு வாரத்தில் ஏழு நாட்களும், அவர்கள் வேலை செய்யவேண்டும். இங்கு அவர்களுக்கு பிராணதாரணத்திற்குதிய ஆகாரம்தான் கொடுக்கப்பட்டது. நேசதேசப் படைகள் வந்திராதபோனால், அவுட்வாணங்களும், பறக்கும் வெடிகுண்டுகளும் எந்த முறையில் எந்த சந்நிவேசத்துடன் செய்யப்பட்டனவென்று வெளிவந்திராது. இந்த தொழிற்சாலையில் சென்ற இரண்டு வருஷங்களில் 75,000 முதல் 1,00,000 வரையில் தொழிலாளர்கள் இறந்திருக்கிறார்கள்.

அமெரிக்க ஜெனரல் வெற்றிபெற்ற சேனையின் தலைவராக முதல் முதலில் உத்தரவிட்டார். அவர்களுக்குச் சரியான மரியாதை செய்து அவைகளைப் புதைக்கும்படி அவர் நார்ட்ஹாஸனிலுள்ள நகரவாசிகளுக்கு உத்தரவிட்டார். நார்ட்ஹாஸனுக்கருகில் ஒரு மலைச் சருவில் தொழிற்சாலையை நோக்கியுள்ள ஒரு ஸ்தலத்தைப் பொருக்கி அதில் அவர்களைப் புதைக்க ஏற்பாடு செய்தார். மொத்தம் 2,017 சவங்கள் காணப்பட்டன.

பொருக்கி எடுக்கப்பட்ட ஸ்தலம் தனிப்பட்டவருடையது என்று நகரத்தின் மேயர் ஒரு தூதரை அனுப்பினர். அவர் திரும்பி பின்கண்ட தகவலுடன் சென்றூர். "இந்த இடத்தைக் கொடுக்காவிடில் மேயரும் அவர்களுடன் சேர்ந்து புதைக்கப்படுவார்."

உடனே நியாயவாதிகளும், டாக்டர்களும், கடை வியாபாரிகளும், மாங்களேயும், கதவுகளேயும் சேர்த்து போல்களேயும், பிரெஞ்சுக்காரர்களேயும், பெல்ஜியர்களேயும், டச்சுக்காரர்களேயும், சில ஜெர்மானியர்களேயும் புதைகுழிக்கு எடுத்துச் செல்ல சவப்பெட்டிகளேத் தயாரித்தார்கள்.

ஜெர்மன் பொதுமக்கள் இதைப்பற்றி என்ன நினைக்கிருர்கள். 45,000 ஜனங்களுள்ள நார்ட்ஹாஸனில் இவ்விதமான அக்கிரமச் செய்கைகள் ஜனங்களுக்குத் தெரியவராமல் இருந்திருக்காது. இங்கு விசித்ரமாக இருக்கிறது. அவர்கள் அதைப்பற்றி நினைக்கவேஇல்லை. ஒரு ரிபோர்ட் பின்வருமாறு இருக்கிறது. "நான் அவர்களின் மனதை அறிய விரும்பினேன். அவர்கள் மனதாரவே விஷயங்களே அறிய வேண்டாமென்று ஒரு திரையைப் போட்டுக் கொண்டதுபோல் தெரியவருகிறது. அவர்களுக்கு வெகு சமீபத்திலேயே மிகவும் கேவலமான நிலமையில் கொடுமை விளேவிக்கப்பட்டது. அவர்களும் அதை ஒப்புக்கொள்ளவில்லை."

---

## லண்டன் நல்ல காலத்தை எதிர்பார்க்கிறது

(ஆஸ்வால்ட் டச்சு).

குராகூஸஸ், டுலிப்புகள், நார்ஸிஸி, டாபோடில்ஸ் முதலிய புஷ்பங்கள் மறுபடியும் லண்டன் உத்யானவனங்களிலும், தோட்டங்களிலும் புஷ்பிக்கின்றன. ஆகிலும் வசந்த காலத்தில் வியாபார ஸ்தலங்களில் முன் போல அவ்வளவு புஷ்பங்கள் காணப்படவில்லை. ஏனெனில் ஆயிரக்கணக்கான தோட்டங்களும், உத்யானங்களும், காய்கரிகள், உருளேக்கிழங்கு, டொமாடோ, வெங்காயம் முதலியவற்றை உற்பத்தி செய்வதற்கு உபயோகப்படுத்தப்படுகின்றன. யுத்தத்தின் முடிவு நெருங்கிவிட்டதென்று அகில பிரிடனிலுள்ள ஒவ்வொருவரும் உணர்ந்து வந்தாலும் யுத்த முயற்சியின் தளர்ச்சியே ஏற்படவில்லை. வெற்றிக்கான கடைசி முயற்சியில் தான் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

அகில பிரிடனும், முக்கியமாக லண்டனும், இந்த வசந்த காலத்தில் அதிகக் களேப்புற்றிருக்கிறது. சென்ற இலேயுதிர்காலத்திலும், மாரிகாலத்திலும், ஜனங்களின் அதிக பிரயாசையுள்ள வேலேயும், கடுங்குளிரிஞல் அநேக சிரமங்களும் காணப்பட்டன. ஆகிலும் ஒவ்வொருவரும் சமாதானமும், அயர்வும் வேண்டுமென்று சொல்லிக்கொள்ளவில்லை. இதே சமயத்தில் யுத்த முடிவடையும் வரையிலும் ஐரோப்பாவிலும், ஆசியாவிலுமுள்ள ஜனங்களுக்கும் மிலியன் கணக்கான ஸோல்ஜர்களுக்கும் அபாயமில்லை என்று ஏற்படும் வரையிலும் முயற்சியைத் தளர்ச்சி செய்யக்கூடாதென்று அவர்கள் உறுதிகொண்டிருக்கிருர்கள்.

இதே சமயத்தில் பொதுமக்கள், முக்கியமாக, தெற்கு இங்கிலாந்திலுள்ள ஜனங்கள் அபராமான கஷ்டங்களே அனுபவித்திருக்கிருர்கள், என்பதை பிரிடிஷ் நிர்வாகம் உணர்ந்து, யுத்த நிலேமையிலிருந்து சமாதான முறைக்கு வருவதற்கான எல்லா வசதிகளேயும் செய்யமுயன்று வருகிறது.

முதல் முதலாக விளக்கவிப்பு. சென்ற செப்டம்பர் மாதத்திற்குப் பின் நகரங்களின் தெருக்களில் சிறிது வெளிச்சம் காணப்படுகிறது. தெரு விளக்குகள் மங்கலாக பிரகாசிக்கலாம். ஜன்னல்கள் வழியாகவும் மங்கலான வெளிச்சம் காணப்படலாம்.

லண்டனிலுள்ள விளக்குள் சிறுகச் சிறுக ஏற்றப்படுகின்றன. சாதாரணமான நக்ஷத்திர வெளிச்சத்திலிருந்து பிரகாசமான சந்திர வெளிச்சம் போல் விளக்குகளேப் போடும் ஒவ்வொரு தெருவும் பத்திரத்தை உத்திரவாதம் செய்கிறது. மனத்தாங்கலே சிறிதுகளேந்துவிட்டது. பிரகாசமான தீபாலங்காரம் வருவதை சூசிப்பிக்கிறது.

இதற்கு முன்னிருந்ததைவிட லண்டனிலுள்ள ஒவ்வொரு வரும் இந்த ஆருவது வசந்த காலம் புதிய வாழ்க்கை, புதிய புஷ்பங்கள், வாழ்க்கை முறையில் புதிய ஏற்பாடுகள் முதலியவற்றை முன்கூடி வெளியிடுகிறது என்று அறிகிருர்கள். பழுதுபட்ட லக்ஷக்கணக்கான வீடுகள் பழுதுபார்க்கப்படுகின்றன. மேன் கூரைகள் சரிபார்க்கப்படுகின்றன. தளங்கள் சீர்படுத்தப்படுகின்றன. இவையெல்லாம் நம்பிக்கையை வளர்ச்சி செய்யும் அடையாளங்கள். சென்ற 5-ம் வருஷங்களில் லண்டனின் சுற்றுப்புறத்தோற்றம் மிகவும் ஆபாசமாகிவிட்டது. நல்ல காலம் தோன்றிவிட்டதால் கட்டிடத்தூள்களேயும், பாழான கட்டடங்களேயும், அகற்ற ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

எல்லா இடங்களிலும் கட்டடங்களேப் புதுப்பிக்க மகத்தான திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன, நகர பரிபாலன சபைகள் புனருத்தாரண திட்டங்களேப் போட்டு வருகிருர்கள்.

தொழிற்சாலைகள் சமாதான முறைகளுக்குத் திரும்பிவிட்டன. பொதுஜன வாழ்க்கைக் குறிய ஆடைகளும், தயாரிக்கப்பட்டு போர்முனையிலிருந்து திரும்பிவரும், அல்லது சேனையிலிருந்து கலைக்கப்பட்டு வரும் ஸோல்ஜர்களுக்கு வழங்கப்படத் தயாராக இருக்கின்றன. ஜன சமூகசீர்திருத்தத்திற்கும் யுத்தத்துக்குப் பின் எல்லோருக்கும் உத்யோகத்தை வழங்குவதற்கும் திட்டங்கள் போடப்பட்டு வெகு தூரம் கையாளப்பட்டுவிட்டதால் எந்த நிமிஷத்திலும் அவைகளைப் பூர்த்தி செய்துவிடலாம்.

யுத்தம் முடிந்த பின் நடைபெறப்போகும் பொதுஜனத் தேருதல்களுக்காக ராஜீயக் கக்ஷிகள் தயாராகி வருகின்றன. ஒரு வருஷத்திற்கு முன் இவையெல்லாம் அசாத்யமாக இருந்திருக்கும். அந்த சமயத்திலும் எல்லா எண்ணங்களும் எல்லா முயற்சிகளும் ஐரோப்பிய விடுதலையில் ஈடுபட்டிருந்தன.

சமாதானத்திற்கான இந்த திட்டங்கள் இன்னும் செய்யப்படவேண்டிய வேலைக்குக் குதாவடையாக இல்லை. ஆகிலும் வெற்றிக்காக கடுமையான முயற்சி செய்யப்பட்டு வரும் பொழுதும் யுத்தத்துக்குப் பிந்திய உலக சீர்திருத்த திட்டங்களும் போடப்பட்டு உருவாகி வருகின்றன.

1944—1945-ம் வருஷ கடுமையான மாரிகாலத்திற்குப்பின் வசந்த காலமும் வேனீர் காலமும் வருமென்று நிச்சய புத்தி ஏற்பட்டது போல 1940, 1941-ம் வருஷ நெருக்கடியிலும், அகில பிரிடனிலுள்ள ஒருவரும் இறுதியில் வெற்றி கிடைத்துவிடுமென்பதை சந்தேகிக்கவில்லை.

ஜெர்மனியின் யுத்த யந்திரத்தின் எஞ்சியுள்ள பாரத்தை மேற்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும், நேசதேசப் படைகள் அழித்துவரும் பொழுது வெற்றியும் சமாதானமும் சமீபத்தில் கிட்டும்படி செய்வது தான் பிரிடனின் இறுதி முயற்சி என்று பிரிடிஷ் மக்கள் அறிவார்கள்.

மரங்கள் வளர்ச்சி பெறுவதையும் புஷ்பங்கள் மறுபடியும் புஷ்பிப்பதையும் கண்டு சென்ற ஐந்து வருஷங்களாக மிகுதியானதியாகங்கள் செய்யப்பட்டு பிரார்த்தித்து வந்த அழகிய வாழ்க்கையும், தேசத்தின் சுபிக்ஷமும் நிலைபெறுவதற்கு அவைகள் அடையாளங்கள் என்று ஒவ்வொரு வரும் நினைக்கிறார்கள்.

---

# வெடிகுண்டு வீச்சின் உச்சநிலை.

## பத்து டன் குண்டு.

### (E. கோல்ஸ்டன் ஷெப்பர்ட்).

உலகத்திலேயே மிகவும் பெரியதான பிரிடிஷ் 10 டன்கள் எடையுள்ள வெடிகுண்டு தான் பரீக்ஷார்த்தமாக ஜெர்மனியிலுள்ள லக்ஷியங்கள் பேரில் சில சமயங்களில் வீசப்பட்டிருக்கின்றன.

முதல் முசலாக அந்த வெடிகுண்டு வீசப்பட்டதைப்பற்றி பத்திரிகை வாசகர்களுக்கு நாம் அறிவித்ததிலிருந்து நேசதேச விமானப் படைக்கு அந்த மகத்தான வெடி குண்டைப் பற்றி திருப்தியும், நம்பிக்கையும் ஏற்பட்டிருக்கிறதென்று சொல்லலாம். 10 டன் வெடி குண்டென்பது ஒப்பற்றது. இந்த யுத்தத்தில் எந்தப் போர் புரியும் நாடும் இதற்கு ஒப்பான வெடி குண்டை உபயோகித்ததில்லை. தெற்கு இங்கிலாந்தை நோக்கி ஜெர்மானியர் அனுப்பிய அவ் வெடி குண்டுகள் புறப்படும்பொழுது ஏறக்குறைய 10 டன்கள் இருந்தபோதிலும் குறிப்பிட்ட ஸ்தலத்துக்கு வரும்பொழுது ஒரு டன் வெடி மருந்தைத்தான் பெற்றிருக்கும். இவ்வளவு மிகுதியான வெடி மருந்துள்ள ஒரு குண்டையும் எந்த பீரங்கியும் பிரயோகித்ததில்லை. பிரிடிஷ் விமானப் படையைச்சேர்ந்த 10 டன் வெடி குண்டு தான் ஒரு லக்ஷியத்தைத் தாக்கிய ஒரு மகத்தான வெடி குண்டு. 90 டன்கள் எடையுள்ளதும் நுனியில் 10 டன்கள் வெடி மருந்துள்ளதுமான ஒரு வெடி குண்டைத் தயாரிக்க ஜெர்மனி முயற்சி செய்து வருகிறதென்று வதந்திகள் தோன்றின. ஆகிலும் அது இன்னும் ஊர்ஜிதம் ஆகவில்லை.

22,000 ராத்தலுள்ள வெடி குண்டை ஏற்றிச்செல்ல உலகத்திலேயே ஒரு ரகமுள்ள வெடி விமானம்தானிருக்கிறது. பிரிடிஷ் ஆவ்ரோலங்காஸ்டர் விமானத்தில் விசாலமான குண்டு ஏற்றிச்செல்லும் பிரதேசம் ஒதுக்கப்பட்டது. அந்த அரையை டிர்பிட்ஸை மூழ்கடித்த 12,000 ராத்தல் உள்ள வெடி விமானத்தை ஏற்றிச்செல்ல ஒரு சிறிது மாற்றியமைத்தார்கள். அதைவிடப்பெரியதான 10 டன் வெடி குண்டை ஏற்றிச்செல்ல மிகவும் குறைவான சீர்திருத்தம் தான் தேவைப்பட்டது. பிரிடனிலிருந்து ஜெர்மனிக்கு 10 டன் வெடி குண்டை ஏற்றிச் செல்லும் லங்காஸ்டர் விமானம்தான் இது வரையில் 4 முதல் $5\frac{1}{2}$ டன்கள் மொத்த எடையுள்ள வெடி குண்டுகளை ஏற்றிச்சென்றது.

மற்ற கனமான வெடி விமானங்களையும் சிறிது தூரம் 10 டன் குண்டை ஏற்றிச்செல்ல உபயோகப்படுத்தலாம். இந்த உண்மையை நாம் தூரக்கிழக்குப் போரிலும் மறந்து விடக்

கூடாது. ஏனென்றால் இப்பொழுது நேசதேசத்தாருக்கு ஜப்பானியிலுள்ள முக்கியமான லக்ஷியநகரங்களுக்கு சமீபத்தில் விமான தளங்கள் கிடைத்துவிட்டன. இந்தப் புதிய வெடி குண்டுகளை ஏற்றிச்செல்ல லங்காஸ்டர் விமானத்தைப்போல் மற்றெந்த வெடி விமானத்தையும் திருத்தியமைக்க முடியாது. ஆகையால் லங்காஸ்டர் விமானத்தின் சேவை ஒப்பற்றது. யுத்த விமானம் என்ற முறையில் அது உயர்தரமான சிக்கன முறை உள்ளதாயும் அவசியமான உபயோகத்துக்கு வளைந்து கொடுக்கக்கூடியதாகவும் இருக்கிறது.

குறிப்பிட்ட லக்ஷியத்துக்காக விமானங்களைக் கட்டுவதற்கு இதைவிட சிறந்த உதாரணம் கிடையாது. லங்காஸ்டர் விமானம் வெடி குண்டுகளை ஏற்றிச்செல்லவும் தற்காப்பு செய்து கொள்ளுவதற்கும் அமைக்கப்பட்டது. அதிலுள்ள மெர்லின் எஞ்சின் உயர்தரமான சேவைக்கும் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு அம்சங்களும், வெகுதூரம் செல்லுவதில் அதற்கு ஏற்பட்ட அனுபவமும், லங்காஸ்டரில் 22,000 ராத்தல் எடையுள்ள வெடி குண்டுகளையும், எண்ணெயையும் கொண்டுபோகும் வசதியை உண்டுபண்ணிவிட்டன.

இந்த யுத்தத்தில் இதைவிட திறமையுள்ள வெடி விமானத்தை நாம் காணமாட்டோம். லங்காஸ்டர் இல்லாவிடில் பறக்கும் வெடி குண்டுகளையும், அவட் வாணங்களையும், இவ்வளவு சுலபமாக சமாளித்து விமான ஆதிக்கம் பெற்றிருக்கமுடியாது.

---

# வெற்றிபெற்றவர்களே ஒழிய துன்புறுத்துகிறவர்கள் அல்ல.

## ஆம்காட் ஜெர்மனியில் வேலை செய்யும் விதம்.

### (ஜார்ஜ் பைபி டெயிலி டெலகிராப்).

ஜெர்மனியில் நாம் இப்பொழுது நடத்திவரும் ராணுவ நிர்வாகத்தில் ஒரு சந்ததிக்குமுன் காணப்பட்ட எல்லாவற்றையும் மன்னிப்புச் செய்யும் மனப்பான்மை காணப்படவில்லை.

"சகோதரபாவம் கொண்டாடக்கூடாது" என்றும் இதுபோல் சொல்லும் கொள்கைகளின் உள்வயனம் எதிரியை நாம் நடத்தும் முறையில் அடங்கியுள்ளது. ஆரம்பம் முதற்கொண்டே ஜெர்மானியர்கள் முறியடிக்கப்பட்டு விட்டார்களென்றும் அவர்களுக்கு யாதொரு சலுகையும் காட்டப்படாதென்றும் சொல்லிவருகிறோம்.

ராணுவ நிர்வாகம் அனுப்பும் உத்தரவுகளை அவர்கள் கீழ்ப்படியவேண்டுமென்றும் நாங்கள் வற்புறுத்துகிறோம். எங்கள் முன் அதிக சிரமங்கள் இருப்பதினால் நாங்கள் தகுதியற்ற பெருந்தன்மையினால் பாதிக்கப்படும் நிலைக்கு உட்படவில்லை.

நாஸி தத்துவத்தை நிர்மூலமாக்குவதில் ராணுவ கவர்னர் என்ற முறையில் ஈசன்ஹவருக்கு அநேக அலுவல்கள் இருக்கின்றன. ஆகிலும் போர் நடைபெறும் பொழுது நேசதேசப் படைகளின் பத்திரத்தைக் கோருவதுதான் அவருடைய முதல் வேலை. இந்தப்பத்திரத்திற்கு பொதுமக்களிடையே ஏற்படக்கூடிய வியாதிகளும், பலாத்காரமும், ஹானியை உண்டு பண்ணும்.

G. ஐந்து என்ற அமைப்பில் பொதுஜன பத்திரம், பொதுஜன சுகாதாரம், பொதுஜன வசதிகள், நிதி, கோசம், தொழிலாளர் போன்ற அநேக பிரச்னைகளைத் தீர்க்கக்கூடிய நிபுணர்கள் இருக்கிறார்கள். நிபுணர்கள் விசேஷப்பயிற்சி பெற்ற உதவியாளருடன் பிடிபட்ட தேசத்தில் நிர்வாகத்தை நடத்தும் துருப்புகளுடன் செல்லுகிறார்கள். அங்கு வந்தவுடன் காலத்திலேயே ராணுவ கவர்னர் மூலம் அவர்கள் ஒரு பிரகடனத்தை பிரசுரிக்கிறார்கள். அதன் மூலம் நேசதேசத்தாரின் உண்மையான எண்ணங்களை ஒவ்வொரு ஜெர்மானியரும் அறிந்துவிடுகிறார். அது பின்வருமாறு :—

"என்னுடைய கமாண்டுக்குட்பட்ட நேசதேசப் படைகள் ஜெர்மனிக்குள் நுழைந்து விட்டன. நாங்கள் வெற்றி முரசுடன் வருகிறோம். நாமகள் உங்களைத் துன்புறுத்தவரவில்லை. நாங்கள் நாஸி தத்வத்தையும் பாஸி தத்வத்தையும் அழித்து விடுவோம். நாஸி ஆக்ஷியை ஒழிப்போம், நாஸிக்கக்ஷியைக் கலைத்துவிடுவோம், நாஸிக்கக்ஷி சிருஷ்டித்திருக்கும் அக்கிரமமான, கொடுமை பொருந்திய வித்தியாசம் உள்ள சட்ட திட்டங்களையும், ஸ்தாபனங்களையும் களைத்து விடுவோம். உலகத்தின் சமாதானத்தை அநேகம் தடவைகளில் சீர்கேடு செய்திருக்கும் ஜெர்மன் ராணுவத்தையும் ஒழித்து விடுவோம். குற்றங்களையும் அக்கிரமங்களையும் செய்த ராணுவ, நாஸிக்கக்ஷித் தலைவர்களை விசாரணைக்குட்படுத்தி குற்றத்துக்குத் தக்கவாறு சிக்ஷை விதிப்போம். நேசதேசப் படைகளை எதிர்த்துப் போராடுகிறவரை இரக்கமன்னியில் அழித்துவிடுவோம்."

இதே சமயத்தில் ஜெர்மன் ராணுவ கெஜெட்டும் பிரசுரிக்கப்படும். அது பருமனான ஒரு புத்தகம். ஜெர்மன் பாஷையிலும், ஆங்கிலத்திலும் லண்டன் கெஜெட்டு மாதிரி அமைக்கப்

பட்டுள்ளது. அதில் சட்ட திட்டங்கள் எல்லாம் அடங்கியிருக்கும். அதில் ராணுவ நிர்வாகத்தைக் குறித்து ஜெர்மானியர்கள் செய்யக்கூடிய சகல விதமான குற்றங்களும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

சர்வதேச சட்ட திட்டப்படி ஈசன்ஹவருக்கு சட்டமியற்றுவது, நிர்வாகத்தை நடத்துவது, நியாயம் வழங்குவது என்ற அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. துருப்புகள் முன்னேறும் பொழுது அவர் ஜெர்மன் ராணுவ நிர்வாகத்தைத் தள்ளிவிட்டு ஆக்கிரமிக்கப்பட்ட நாட்டின் எஜமானனாக ஆகிவிடுகிறார்.

ராணுவ நிர்வாகம் டெலிபோன், தந்தி, மற்ற வெளி நாட்டு மெயில் போக்குவரத்துகளை உடன் காலத்தில் ரத்து செய்து விடும். பள்ளிக்கூடங்களும், நாடகசாலைகளும், சினிமாக்களும் மூடப்பட்டுவிட்டன. உத்தரவன்னியில் ஒரு மீட்டிங்கும் நடை பெறக்கூடாது. எந்த பொது மக்களும் எல்லைச்சரகத்தைத் தாண்டமுடியாது. தணிக்கை முறையும் கடுமையாக இருக்கிறது. பத்திரிகைகளும், ஒலிபெருக்குகளும், விசேஷமான ரெகுலேஷன்களுக்கு உட்பட்டவை.

நாஸி தத்வத்தை ஒழிக்கும் முதல் நடவடிக்கையாக, நாஸிக் கொள்கைகளை ஆதரிக்கிறவர்கள் என்று தஸ்தாவேஜு மூலம் புலப்படும் உத்தியோகஸ்தர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவார்கள். நாஸிக் கக்ஷியின் உயர்தர ஆபீஸர்களும், அல்லது அடுத்துவரும் ஆபீஸர்களும், கண்டு பிடிக்கப்பட்டால் அவர்களை அரெஸ்டு செய்து அவர்களின் விசாரணைக்காக சாக்ஷியம் தயார் செய்யப்படும்.

அக்கிரமங்களைச் செய்தவர்களைக் கண்டு பிடிப்பதில் அநேக சிரமங்கள் இருக்கின்றன. ரைன் நதிக்கும் பெல்ஜிய எல்லைக்கும் மத்தியில் யாதொரு நாஸிகளும் காணப்படவில்லையென்று ராணுவ நிர்வாக அதிகாரிகள் கேலியாகச் சொன்னார்கள். ஏனெனில் நாஸி என்று அங்கு ஒருவரும் ஒப்புக்கொள்ளவில்லை.

விடுதலை பெற்ற அயல்நாட்டுத் தொழிலாளர்கள் இது விஷயத்தில் ஒத்தாசை செய்கிறார்கள். கஷ்டங்களை அனுபவித்தபின் அவர்கள் நாஸிக் குற்றவாளிகளை முழுமனதுடன் காண்பித்து விடுகிறார்கள். பொது மக்களில் ஒவ்வொருவரையும் விசாரணை செய்தபின்தான் நாஸிச் சின்னமில்லாத ஒருவரை மேயராகத் தேர்ந்தெடுக்க முடிகிறது. நகர பரிபாலன இலாகாவில் திறமையுள்ள ஆபீஸர்களைக் கண்டு பிடிப்பதிலும், இந்த சிரமம் ஏற்படுகிறது. விரும்பத்தகாதவர்களை எடுத்துவிட்டு ஜெர்மன் பொதுஜன சேவைப் படையை உபயோகிப்பது தான் முக்கியமாகக் கையாளப்படுகிறது. போதுமான நபர்கள் கிடைக்காவிடில் நேசதேச ராணுவத்தினர்களே நியமிக்கப்படுவார்கள். ஜெர்மன் போலிஸ் சம்பந்தமாக, கைதி முகாம்களிலிருந்து போதுமான அளவிற்கு யோக்கியப் பொறுப்புள்ளவர்களைக் கொண்டுவருதற்கு ஆறுமாத காலமாகும்.

ஆக்கிரமிப்பு நாடுகளிலுள்ள நிலமையின் திருப்திகரமான அம்சம் யாதெனில் யுத்த அனுபவித்தினால் ஜெர்மானியர்கள் சீர்கெட்டுப்போய் விட்டதினால் அவர்கள் ஒத்துழைக்க ஆவலுள்ளவர்களாக இருக்கிறார்கள். கெடுத்து விடுவதைக்காட்டிலும் உதவி செய்வதுதான் தங்களுக்கு சௌகரியமானதென்று அவர்கள் அறிவிக்கிறார்கள். நாஸிகளின் பிரமுகர்களைக் குறிப்பாகக் கண்டு பிடிக்கும் நிலமையை ராணுவ நிர்வாகம் அடைந்துவிடவில்லை. அதே மாதிரித்தான் ஜெர்மன் ராணுவத்தையும் ஜெர்மன் யுத்த இயந்திரத்தையும் அழிப்பதற்குக் காலதாமதம் ஆகும். ஆகிலும் சமயம் கிட்டிவிட்டது.

---

# ஜனாதிபதியின் தீபம் முன்போல் பிரகாசிக்கிறது.

## காங்கிரஸ் சபையில் ஜனாதிபதி ட்ருமனின் சொற்பொழிவு.

(டெயிலி டெலகிராப்).

தலைமை வகிக்கும் தீபம் கைமாறிவிட்டது. ஆகிலும் அது முன்போல பிரகாசமாக ஜ்வலிக்கிறது.

நேசதேசத்தாரின் மகத்தான திட்டம் பாதிக்கப்படவில்லை. நடவடிக்கைகளில் அமெரிக்காவின் பாகத்தை மிஸ்டர் ரூஸ்வெல்ட் நியமித்த மாலுமிகளும், ஸோல்ஜர்களும் நடத்தி வருவார்கள். அவர்கள் எல்லோரும் மாறுதல் அடையாமலும் யாதொரு தடங்கலன்னியிலும் இருந்து வருகிறார்கள். ஜனாதிபதி ட்ருமனின் உருக்கமான சொற்பொழிவில் ரூஸ்வெல்டும், சர்ச்சிலும் நிறுவிய நேசதேசங்களின் திட்டத்தைத்தான் அமெரிக்கா பின்பற்ற வேண்டுமென்ற மனமார்ந்த அபிப்பிராயம் காணப்படுகிறது. முதலாவது சந்தர்ப்பத்திலேயே அமெரிக்க நிர்வாகத்தின் மாறுதலினால் ஜெர்மனிக்கும், ஜப்பானுக்கும், உதவி ஏற்படாது என்று எச்சரிப்பது புத்திசாலித்தனம்தான். சமாதான ஷரத்துக்களைப்பற்றி

பேரம் செய்வது வீண் நம்பிக்கை என்றும் சொல்லப்படுகிறது. யுத்தக் கைதிகளை நன்றாக சிக்ஷிக்கவேண்டும் என்ற அவசியமும் வற்புறுத்திச் சொல்லப்படுகிறது.

ட்ரூமன் சிரத்தையுடன் சம்பாவிதங்களைப்பற்றிய உண்மையானமதிப்பை வெளியிட்டிருக்கிறார். சான்பிரான்ஸிஸ்கோவில் திடீரென்று அற்புதமாக புதிய உலக அமைப்பு ஏற்பட்டுவிடாது. நிரந்தரமான அஸ்திவாரத்தைப்போட பெரிய வல்லரசுகள் ஒத்துழைக்க வேண்டும். நிறுவப்பட்ட திட்டத்தை அந்நாட்டு மக்களும் ஏக மனதுடன் ஒப்புக்கொள்ள வேண்டும். நம்பிக்கை பெறக்கூடியதும் உபயோகமுள்ளதாகவுள்ள சர்வதேச ஸ்தாபனத்தை அமைப்பதற்கு, காலமும் பெருவாரியான பரஸ்பர ஒப்பந்தமும் தேவைப்படும்.

வெற்றி பெற்றுவிடுவோம் என்ற நம்பிக்கையை உறுதிப்படுத்த அவரால் முயன்றதைச் செய்ய ஜனாதிபதி ட்ரூமன் வந்திருக்கிறார்.

---

# புதிய பொருளாதார, ஜனசமூக சம்பந்தங்கள்.

## உலக அமைப்பின் முக்கியத்வம்.

### டேவிட் மித்ராணி.

ஏப்ரல் மாத முடிவில் சான்பிரான்ஸிஸ்கோவில் விவாதிக்கப்படும் புதிய சர்வதேசஸ்தாபனத்திற்குரிய திட்டம் சரித்திர பூர்வமான விசேஷ கௌரவம் உள்ளது. இப்பொழுதுதான் முதல் முதலாக ஏற்றுக்கொள்ளுவதற்குமுன் மிகவும் முக்கியத்வமுள்ள சாஸனம் பகிரங்கப் படுத்தப்படுகிறது.

ஆனால் அந்த திட்டம் தூக்குத் தூக்காக சர்ச்சை செய்யப்படுகிறது. ஒன்று அல்லது இரண்டு அனாவசியமான விவரங்களைப்பற்றி கவனம் செலுத்தப்படுகிறது. புதிய ஸ்தாபனத்தின் பொதுப்படையான அம்சத்தை அறிந்து அதை துரிதப்படுத்த யாதொரு கவலையும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இது மிகவும் நுட்பமான மிகவும் கஷ்டமான சீர்திருத்தமாகும். ஆகிலும் டாக்டர் ரெயின் ஹோல்ட் நிருபர் சொல்லுவதுபோல், "சர்வதேச நிர்வாகம் என்பது எவ்விதம் என்று நாம் அறிந்துகொள்ளாததினால்தான் அவ்விதமான சர்வதேச நிர்வாகம் அமைக்கப்படவில்லை" என்று குறை கூறுகிறவர்களில் பெரும்பான்மையோர் நினைக்கிறார்கள்.

சர்வதேச சம்பந்தங்களில் சக்தி என்பது ஒரு முக்கிய அம்சம். அதை அடக்கி ஆளாவிட்டால் சமாதானம் இருக்காது. பெரிய வல்லரசுகள் அவர்களுடைய வலிமையை அவர்களுக்கு சமமாக உள்ள சகோதர நாடுகளின் பெரும்பான்மையை அடக்க உபயோகிக்க நேரிடுமென்று குறை கூறுகிறவர்கள், ஜனநாயக நிர்வாகம் பரிபூர்ணமான அமைப்புப்பெற்றதில்லை என்பதையும், பழைய அனுபவத்தை ஒட்டி அபிவிருத்தியடையும்முறையில் அது திருத்தி அமைத்துக் கொள்ளக்கூடியதென்பதையும் மறந்துவிடுகிறார்கள். பல்வேறுபட்ட 60 நாடுகளை ஒரு பொதுவான திட்டத்தில் இணைப்பதென்றால் குரோஷியஸ்ஸைப் போல் செய்வதும் முற்போக்கில்லாத அம்சங்களை உபயோகப்படுத்துவதும்தான் சிறந்த முறை ஆகும்.

இந்த கோட்பாடு புதிய சங்கத்தின் மத்திய அமைப்பில் பெரிய வல்லரசுகள் எடுத்துக் கொள்ள வேண்டிய பங்குக்கு அன்வயிக்கும். யால்டா மகாநாட்டில் உலகப்பத்திர சபையில் வோட் செய்யும் முறையில் மூன்று வல்லரசுகளும், ஒரு ஒப்பந்தத்துக்கு வந்தார்களென்பது தங்குதடையற்ற அதிகார ராஜீய முள்ள உலகத்தில் மட்டுமில்லாமல், யுத்த காலத்தில் சித்தியடைய முடியாத லக்ஷியங்களுக்கும் உண்மையான முற்போக்கான நடவடிக்கையாகும். கிரிமியா திட்டமானது கௌன்ஸிலின் முடிவுகளை மூன்று வகைகளாகப் பிரிப்பதைப் பொறுத்ததாகும். நடவடிக்கை சம்பந்தமான பொது விஷயங்களை சபையிலுள்ள 11 அங்கத்தினர்களின் 7 பேர்கள் கொண்ட பெரும்பான்மையோர் முடிவுசெய்வார்கள். ஒரு வட்டார சம்பந்தமான பிரச்னையுள்பட சபையால் தீர்த்து வைக்கக்கூடிய விஷயங்களெல்லாம் 7 மெம்பர்களின் வோட்டுகளால் முடிவு செய்யப்படவேண்டும். ஏழில் நிரந்தரமான ஐந்து மெம்பர்களும் இருக்கவேண்டும். ஆனால் எந்த பிரச்னையிலும் சம்பந்தப்பட்ட எந்த மெம்பரும் வோட் செய்யக்கூடாது. இறுதியாக பலாத்காரத்தை உபயோகிக்க முடிவு செய்வதற்கு ஏழு பேர் கொண்ட மெஜாரிடி வேண்டும். அதில் நிரந்தரமாக உள்ள மெம்பர்களும் இருக்கவேண்டும். ஆகையால் நிரந்தரமாக உள்ள அங்கத்தினர்களுக்கு புரக்கணித்துவிடும் உரிமை உண்டு. இதைப்பற்றித்தான் விரிவாகக் குறைகூறி வருகிறார்கள்.

அமெரிக்க ஸெனட்டின் அயல்நாட்டு சம்பந்தக் கமிட்டியின் ஆக்டிங் தலைவரான ஸெனடர் ஜார்ஜ், பின்வருமாறு சொல்லுகிறார்.—என்னவென்றால் அமெரிக்காவைப் பொருத்தும் உத்தரவுகள் போடலாம் என்ற அபிப்பிராயத்துக்கு எதிர்ப்பு இருக்கக்கூடுமாதலால் இந்த சமரசம் ஒப்பந்தத்தை ஊர்ஜிதப்படுத்தக்கூடாது. அதைத் தவிர வோட்டில் ஏற்பட்ட சமரசம்

சர்வதேச விவகாரங்கள் குறிப்பிட்ட அதிகார வரம்புக்குட்படவேண்டுமென்ற பிரச்னையைத் தீர்க்கவும் வழியேற்படுத்தியது. இந்த சாதகத்தை நாம் யுத்த சமயத்தில் அடைய முடியவில்லை.

அமெரிக்காவும், ருஷ்யாவும் இதில் கலந்துகொள்ள வேண்டுவது அத்யாவசியம் என்று எல்லோரும் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒரு கொள்கையை பரிஷ்காரம் செய்யவேண்டுமென்று விரும்புகிறவர்கள் அவர்களைக் கூட்டாளிகளாக அடையுமுன் தாண்டவேண்டிய இடையூறுகளை நன்கு மதிக்கிறார்களில்லை. முக்கியமாக அமெரிக்கா சம்பந்தப்பட்டமட்டில் ஜனாதிபதியும் காங்கிரஸும் ஐதீகமாக உள்ள தனித்திருக்கும் மனப்பான்மையை மாற்ற வேண்டும். மேலும், ஜனாதிபதிக்கும் காங்கிரஸுக்குமுள்ள ராஜீய சமத்வத்தில் மாறுதலை ஏற்படுத்தக்கூடிய கொள்கைகளை ஏற்றுக்கொள்ள காங்கிரஸ் சம்மதப்படாது. இப்படி எப்பொழுது நேரிடுமென்றால், டம்பார்டன் ஒக்ஸ் திட்டப்படி, ஜனாதிபதி அமெரிக்காவின் கவசம் பூண்ட படைகளின் ஒரு பாகத்தையாவது ஸெனட்டின் குறிப்பான சம்மதமன்னியில் உபயோகிக்கும் அதிகாரத்தைப் பெறும்பொழுதுதான்.

அடுத்தபடியாக வட்டார ஒப்பந்தம் சம்பந்தமான பிரச்னை இருக்கிறது. 1919-ம் வருஷத்தில் அமெரிக்காவின் அயல்நாட்டுக் கொள்கையான தனித்திருப்பது என்பதுடன் ஜோடியாக உள்ள மன்ரோக் கொள்கையையும் சர்வதேச சங்க ஒப்பந்தத்தின் வியாபகத்திலிருந்து எடுத்துவிட வேண்டுமென்று ஜனாதிபதி வில்ஸன் வற்புறுத்தினார். மெக்ஸிகோ நகரத்தில் நடைபெற்ற அகில அமெரிக்க மகாநாட்டில் தற்போதுள்ள நிர்வாகம் மன்ரோக் கொள்கையை சர்வதேச திட்டமாகச் செய்யவேண்டுமென்று முடிவு செய்தார்கள்.

ருஷ்யா ஆரம்பம் முதல் உண்மையான தனித்திருக்கும் எண்ணத்துடனும் பரஸ்பர அவநம்பிக்கையுடனும் வளர்ச்சி பெற்றிருக்கிறது. அதற்கு மகத்தான வெற்றிகள் கிடைத்திருக்கும்பொழுது அது சர்வதேச அமைப்பின் கட்டுப்பாடுகளை ஒப்புக்கொண்டதென்பது பெரிய விஷயமாகும். ஆனால் அமெரிக்க அரசியல் குழப்பத்திலுள்ள சிரமங்களன்னியில் ருஷ்யா திடீரென்று ஒரு முடிவுக்கு வரக்கூடும்.

சர்வதேச வாழ்க்கையில் செல்வ நிலையும் பலமும் என்ற சக்திதான் முக்கியமான அம்சம். அந்த சக்தியை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரக்கூடிய எந்த ஏற்பாடும் சமாதானத்தையும் சர்வதேச நீதி முறையையும் வளர்ச்சிக்க சாதகமளிக்கும். பலஹீனமான நாடுகள் கட்டுப்பாட்டு முறையில் அவர்களுக்கும் சமமான அந்தஸ்து வேண்டுமென்றால் இது நடைபெறாது. அதாவது, பெரிய வல்லரசுகளும் கட்டுப்பாட்டுக்கு உட்படுவதுடன் அவர்களின் சக்தியை உபயோகிப்பதில் சிறிய தேசங்களின் முடிவை எதிர்பார்க்கவேண்டுமென்றும் அச்சிறிய நாடுகள் எதிர்பார்க்கின்றன.

இந்த மாறுதல் சுலபமாக ஏற்படாது. வோட் உரிமைக்காக சண்டைபோடுவதை விட நடைமுறையில் உபயோகமுள்ள ஜனநாயகத்துக்காக ஒப்புக்கொள்ளுவது கொள்கைக்கு விரோதமற்றதில்லை, அல்லது அவிவேகமுள்ள சமரஸமும் அல்ல.

சமமான வோட்டுகள் பெற்று நடைமுறையில் பிரயோஜனமற்றதாக ஆகிவிடும் ஒரு ஸ்தாபனத்தினால் என்ன பிரயோஜனம். இவ்விதமான உயர்தரக் கொள்கையுள்ள மாயையின் குறைவுபாடுகளை டம்பார்டன் ஒக்ஸ் திட்டத்தின் இரண்டாவது செயல் ஸ்தாபனமான பொருளாதார, ஜன சமூக சபையில் தெளிவாகக் காணப்படலாம். அதன் ஜோடனை மிகவும் எளிதில் நம்பாத அரசியல் வாதியையும் திருப்தி செய்யும். அதன் 18 அங்கத்தினர்களை அஸெம்பளி தேர்ந்தெடுக்கும் பெரிய வல்லரசுகளுக்கு விசேஷ ஸ்தானம் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு ஸ்தானம் கொடுக்கப்படும் என்ற உறுதியும் கிடையாது. வோட்டுகளும் மெஜாரிடிபேரில் நிர்ணயிக்கப்படும். அமைப்பில் காணப்படும் இந்த தாராளம் உண்மையான அதிகாரத்தில் குறுகிய எண்ணங்களிருக்கின்றன என்பதை வெளிப்படுத்தவில்லையா?

மேலும் அசாதாரணமான நிலைமையை சமாளிக்க அமைக்கப்பட்டிருக்கும் உலக பத்திர சபை சதாகாலமும் கூடிவரும். ஆகிலும் சமாதானத்துக்குறிய தினசரி அலுவல்களைக் கவனிக்கவேண்டிய பொருளாதார, ஜன சமூக சபை தொடர்ச்சியாகக் கூடுவதற்கு ஒரு ஏற்பாடும் செய்யப்படவில்லை.

சர்வதேச சங்கம் அளவு கடந்த அலுவலினால் உபயோகமற்றதாக ஆகிவிடவில்லை. அதன் இகழ்ச்சிக்கு வெறுமைதான் காரணம்,

ஒரு சர்வதேச நிர்வாகம், அதிலுள்ளவர்களே முக்கியமான போட்டிக்காரர்களாக இருக்கும்பொழுது காவல் உத்யோகம்மட்டும் செய்துவரமுடியாது. இந்த விஷயத்தை மிஸ்டர்

டன் கிளாஸ்கோவில் ஒரு சொற்பொழிவில் எடுத்துக் காட்டினர். "மற்ற எல்லா அம்சங்களிலும் ஒவ்வொரு வல்லரசும் மற்றவர்களிடமிருந்து சுயேச்சையாக காரியங்களை நடத்தி வரும்பொழுது, அக்கிரமப் போரை நடத்துகிறவர்களை அடக்கியாளுவதற்காக ஒன்றுபட்டு உலக பத்திரத்தை சம்பாதிப்பது என்று நினைப்பது வீண் பேச்சாகும்."

வல்லரசுகள் சுதந்திரத்துடனும், முற்போக்காகவும் பொருளாதாரத்துறையில் தான் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுவார்கள். டம்பார்டன் ஓக்ஸ் திட்டமானது உலகத்தில் சர்வதேச சுதந்திர வியாபாரத்தை பத்திரப்படுத்துமென்றும், சில சமயங்களில் தோன்றுகிறது.

1919-ம் வருஷத்தில் இருந்ததைவிட இப்பொழுது பொருளாதார முறையில் பிளவு ஏற்படும் அபாயம் அதிகரித்திருக்கிறது. ஆரம்பம் முதற்கொண்டே சர்வதேச முறையில் அவைகளைத் தீர்த்துவிடாவிடில் எல்லோருக்கும் வேலையை அளிப்பது, பொதுஜன பத்திரம் என்ற உள்நாட்டு பிரச்னைகளில் ஒன்றுக்கொன்று முரணான அநேக தேசீய திட்டங்கள் தோன்றிவிடும். உலக பத்திரத்தைவிட யுத்தத்தினால் பாழாகப்போன ஐரோப்பாவின் துக்ககரமான பிரச்னைகளைத் தீர்ப்பதின் பொறுப்பு பெரிய வல்லரசுகளுடையதாகும்.

இவ்விதமான பிரச்னைகளை தேசங்களை சமாதான முறையில் தனித்தனியாக வைத்திருப்பதினால் தீர்க்கமுடியாது. அவைகளை ஒன்றுபடுத்தி சுறுசுறுப்பாக வேலை செய்யும்படி செய்யவேண்டும். இத்துறையில் நிகழ்ச்சி ஏற்படுவதென்றால் பெரிய வல்லரசுகளின் சோபபேதித்தான் காரணமாக இருக்கும். எல்லோருக்கும் சமமான வோட் உரிமை வேண்டுமென்று சொல்லுவதினால் அந்த வல்லரசுகளின் ஐச்வர்யங்களும், பொறுப்பும பொதுப்படையான லக்ஷியத்தில் ஈடுபட்டுவிடாது.

தற்போதிய சர்வதேச பிரச்னையாதெனில் சக்தியை ஒருவிதமான சர்வதேச அடக்கு முறைக்குள் கொண்டுவருவதுதான். சக்தியின் உற்பத்தி ஸ்தானம் பொருளாதாரம்தான். அந்தத் துறையில்தான மகத்தான சந்தர்ப்பங்களும் பெரும்பான்மையான அபாயங்களும் இருக்கின்றன. அவைகளை பெரிய வல்லரசுகளின் சுறுசுறுப்பான ஒத்துழைப்பின்றியில் தீர்க்கமுடியாது. ஐச்வர்யங்களைக் கொடுத்து உதவுங்கள், ஆனால் அடக்கு முறைக்கு மாறி வரும் காலத்தில் உங்களுக்கு அதிகமான சலுகை காட்டமாட்டோம் என்று சொனனால் அது நடைபெறாது. வல்லரசுகளின் நல்லெண்ணத்தை சிறிய நாடுகளின் சமஷ்டியின் வோட்டு மூலம் கட்டாயப்படுத்தி ஸ்தாபிக்கமுடியாது.

அரசியல் அமைப்பினால்மட்டும் சாவதானமான, சமாதான முறையில் ராஜீய முன்னேற்றம் வந்துவிடாது. புரட்சிக்குப்பின் அரசியல் மாறுதல் நிச்சயமாக ஏற்படும். ஆனால் சர்வதேச முறையில் புரட்சி என்பது உலக அல்லது ஒரு அருத்தகோள வெற்றி என்று இருக்கவேண்டும்.

நாஸிகளின் புதிய உலக திட்டமும் ஜப்பானியர்களின் சமக்ஷேம திட்டமும் இந்த ரகத்தைச் சேர்ந்தவைகள். நல்லதாக இருந்தாலும் கெடுதலாக இருந்தாலும் ஒருமாதிரியான ஒரு விதி ஏற்படுத்தப்படவேண்டும்.

பலஹீனமான நாடுகளை இராஜரீகமான சமத்வத்தையளித்து ரக்ஷிப்பதென்பது பிராசீனமான சர்வதேச நிதியின் முக்கிய அம்சமாக இருந்தது. சிறிய நாடுகளை அவ்விதம் காப்பாற்ற வேண்டுமென்று நினைப்பவர்கள் அவ்விதம் கவலைப்படுகிறார்களென்று தோன்றுகிறது. ஆனால் இந்த உபாயங்கள் உபயோகமுள்ள சர்வதேச சமஷ்டியை உண்டுபண்ணுமா? அப்படி இல்லாவிடில், இப்பொழுதுள்ள சமத்வமில்லாத அதிகாரப் பிரிவினை மறுபடியும் உறுதிப்படாதா?

வரப்போகும் நெருக்கடியான 10 வருஷங்களில் ஏற்படக்கூடிய ஒற்றுமை சர்வதேச சமஷ்டியில் சக்திகள் ஒன்றுபடுவதின் மூலம்தான் ஏற்படவேண்டும். யுத்தத்துக்காக இருந்தாலும் சரி, சமாதானத்துக்காக இருந்தாலும் சரி, இந்த சக்தி முக்கியமாக பொருளாதார ஐச்வர்யத்தைப் பொறுத்திருக்கிறது.

டாம்பார்டன் ஓக்ஸ் திட்டத்தின் உண்மையான பலஹீனம் வோட்டுக் கொடுக்கும் விவரங்களைப்பற்றியதில்லை. உலக பத்திரத்தின் பொதுவான அபிப்பிராயத்தை ஒட்டித்தான் இருந்துவருகிறது. அது பிரச்னையை பலவேறு பகுதிகளாகப் பரிசீலனை செய்கிறது. உலக பத்திர திட்டத்திற்கு அதிக சக்தி திரட்டப்படும்பொழுது பொருளாதார ஜன சமூக சபையானது, இந்த சபை ஒன்றுபடுத்தும் வகையில் வல்லரசுகள் எந்த முறையில் தனிப்பட்ட பொருளாதார ஸ்தாபனங்களை அமைக்கப்போகின்றன என்பதைப் பொறுத்துத்தான் உருவையும் லக்ஷியத்தையும் பெறும்.

சர்வதேச வாழ்க்கையில் மாறுதல்கள் அடையும் கட்டம் அரசியல் கோட்பாட்டினால் அல்ல. புதிதாக வளர்ச்சிபெறும் பொருளாதார ஜனசமூக சபை அதிகச் செல்வாக்குப் பெற்றிருக்கவேண்டும்.

# உதயமாகும் சூரியன் அஸ்தமனம் அடைகிறது.

## ஜப்பானிய ஸப்ளை மார்க்கங்களின் குறவளைப்பிடிப்பு.

ஜப்பானின் அக்கிரமப்போர் இரண்டு பாகங்களுள்ளது. காலத்தினாலும், தேசத்தினாலும் பிரிக்கப்பட்டது. ஒரு பகுதி சைனா யுத்தம். மற்றொன்று 1941-ம் வருஷம் முதல் சைனாவுக்கு வெளியே நடைபெறுவது. இரண்டாவது பகுதியில்தான் ஜப்பான் துரிதமாக வெற்றிகளை பெற்றது. அங்கு தான் இப்பொழுது இன்னும் வேகமாகவும், பலமாகவும் பிற்போக்குகளை அடைந்து வருகிறது.

வெற்றி பெற்றபொழுது ஜப்பானின் திட்டங்கள் ஸ்பஷ்டமாக இருந்தன. ஜப்பானும் அவற்றைப் பிரகடனம் செய்தது. சமக்ஷேமம் போன்ற பதங்களின் சந்தேக அர்த்தம் அப்போதே தெளிவுபட்டது. மஞ்சூரியாவிலிருந்து சைனா, இந்தியா வரையிலுள்ள பிரதேசங்களையும் தூரக்கிழக்கிலும் பஸிபிக்கில் ஆஸ்திரேலியா வரையிலுள்ள நாடுகளையும் ஆக்கிரமிப்பது ஜப்பானின் உத்தேசம்.

இப்பொழுது நேசதேசத்தாரின் சக்தியும், ஐசுவரியங்களும் இந்த மனோராஜ்யத்தைக் கெடுத்து விட்டதினால் தற்காப்பு முறையில் என்ன திட்டங்களையும், தூரக்கிழக்கைத் தன் வசப்படுத்தாமலும், உயரக்கிளம்பி வரும் சூரியனை அஸ்தமயம் அடையாமல் செய்வதற்கு எந்த திட்டங்களையும் டோக்கியோ நிறுவி வருகிறது என்று கவனிப்போம்.

நேசதேசத்தார்கள் ஆஸ்திரேலியாவிலிருந்து புறப்பட்டு நேர் முகமாகத்தாக்கி ஜப்பானியர்களை டச்சுக்கிழக்கு இந்திஸ்தீவுகளிலிருந்தும், நியூகினியாவிலிருந்தும், ஸால்மன்ஸ் தீவுகளிலிருந்தும், வடக்கு நோக்கி துரத்தி இருந்தால் அப்பொழுது ஜப்பான் அதனுடைய யுத்த சக்தியின் இளப்பத்தை அறிந்து வெற்றி கிடைத்த இடங்களிலிருந்து சுருக்கிக்கொள்ளும் தற்காப்பு முறையைக் கையாண்டு உள்நாட்டு தற்காப்பு வட்டாரத்துக்குள் சென்றிருக்கும். நேசதேச யுத்த தந்திரம் இவ்வளவு சுலபமான நடவடிக்கையை அனுமதிக்கவில்லை. விமானந் தாங்கிகள் கொண்ட ஒரு சக்தி வாய்ந்த கடற்படை தரையிலுள்ள சூபர் பறக்கும் கோட்டை. விமானங்களுடன் எதிரியின் அநேக தற்காப்பு ஸ்தானங்களைத் தாண்டிச் செல்ல அமெரிக்கப் படைகளுக்கு வசதி அளித்துவிட்டது.

இதற்கு உதாரணம் காரலைன்ஸிலுள்ள டிரக்கை நேசதேசத்தார் தாண்டிச் சென்றதைச் சொல்லலாம். ஜப்பானியர்கள் டிரக்கில் மிகவும் சக்தி வாய்ந்த கடற்படை, விமானப்படை தளத்தை அமைத்திருந்தார்கள். அது இன்னும் அவர்கள் வசம்தான் இருக்கிறது. ஆகிலும் அமெரிக்கர்கள் வடக்கில் 800 மைல்கள் தாண்டியுள்ள குவாமையும், சைபானையும், மரியனாஸ் தீவிலுள்ள டினியானையும், கிழக்கில் மார்ஷல்ஸ் தீவுகளையும் பிடித்தார்கள். அத்துடன் டிரக் 1944-ம்வருஷ ஆரம்பத்தில் அமெரிக்கக்கப்பல்களாலும் விமானங்களாலும் நொருக்கப்பட்டது. அமெரிக்க கமாண்டர் சொல்லுவதுபோல் டிரக்கை பஸிபிக்குக்குப் புதிதாக அனுப்பபட்ட விமானிகள் ஒத்திகை லக்ஷியமாக உபயோகப்படுத்தி வருகிறார்கள்.

பார்மோஸா இருக்கும் அக்ஷரேகையிலும் உள்நாட்டு வட்டாரத்திலும் டோக்கியோ விலிருந்து சுமாராக 750 மைலகளில் ஐவோஜிமா இருக்கிறது. மார்ச்சு மாதம் 14-ம் தேதி யன்று அங்கு அமெரிக்கக் கொடி நாட்டப்பட்டது. 21,000 பேர்களுக்கு உயிர்ச் சேதம் ஏற்பட்டபின் ஜப்பானியர்களின் எதிர்ப்பு இறுதியாக முறியடிக்கப்பட்டது. அதற்கு முன்னதாகவே ஜப்பானைத் தாக்கித் திரும்பி வரும் சூபர் பறக்கும் கோட்டைகள் ஐவோஜிமாவை இறங்கும் தளமாக உபயோகித்து வந்தன. ஐவோஜிமாவில் இந்த இறங்கும் தளங்கள் இல்லாவிடில் விமானங்கள் திரும்பி வருவது சந்தேகம்தான். ஐவோஜிமாவில் நிலைபெற்றிருக்கும் சண்டை விமானங்களும், வெடிவிமானங்களும், டோக்கியோ, ஒஸாகா, நாகோயா, மற்ற யுத்த நிலயங்களை பலமாக அழித்து வரக்கூடும்.

விடுதலை பெற்ற பிலிப்பைன்ஸ் தீவுகள் ஜப்பானுக்கும் எல்லைப் புறத்திலுள்ள ஜப்பானிய நாடுகளுக்கும் மத்தியிலுள்ள கடல் மார்க்கங்களின் குறுக்கே நேசதேசத்தார்களின் பெரிய முட்டுக்கட்டையாக இருக்கிறது. 7,000 பலரகத் தீவுகளுள்ள பிலிப்பைன்ஸ் தீவுகளில் ஜப்பானின் எதிர்ப்பை பூராவாக ஒழிப்பதற்கு வெகுகாலமாகும். ஆகிலும் லூஸானிலுள்ள விமான தளங்களும் மணிலா விரிகுடாவில் காவைட்டிலுள்ள பெரிய கடற்படைத் துறைமுகம், சீனக்கடலில் நேசதேசத்தார்களுக்கு ஆதிக்கம் அளிக்கும். இதிலிருந்து கிழக்கு இந்தீஸுக்கு செல்லும் ஜப்பானிய ஸப்ளைமார்க்கங்களை வழிமறிப்பது கெட்டிப்படுவதுடன் ஜப்பான கடுமையாக செய்து வந்த சீனகடற்கரையின் முற்றுகையும் நொருங்கிவிடும்.

தற்காப்புப் போரை நடத்தும்படியாக நேசதேச நாடுகளைவிட கடற்படை விமானப் படை பலத்தில் பலஹீனமாகவும் உள்ள ஜப்பான் பர்மாவிலும், இந்தோசைனாவிலும், மலேயாவிலும், டச்சுக்கிழக்கு இந்தீஸிலும், உள்ள படைகளை வடக்கு முகமாகப்பின்வாங்கி அங்கிருந்து

உள்நாட்டுத் தற்காப்பு வட்டாரத்துக்குக் கொண்டு போவதற்கு தரைமார்க்கமாக பின்வாங்கும் வழியைச் சம்பாதிக்க முயலவேண்டும். ஆகையினால்தான் சைனாவில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் இருப்புப் பாதைகளைப் பிடிக்கவும், சுதந்திர சைனாவை இரண்டு பாகமாகத் துணிக்கு சீனா கடற்கரை ஓரமாக உள்ள ஜப்பானியப் படைகளை சாத்தியமான வரையில் பூசௌ, அமாய், சுவாடவ், ஹாங்காங் முதலிய முன்னேறும் வாசல்களில் குவித்து வைக்கவும் ஜப்பான் பிரயாசைப்படுகிறது.

இந்த திட்டத்தை நிறைவேற்ற சக்தி உண்டென்று ஜப்பான் நம்பிக்கையுடன் இருக்கலாம். சேனைதான ஜப்பானிய ராணுவத்தின பலமான அம்சம். மஞ்சூரியாவில் ஜப்பான் ஏராளமான யுத்த தளவாடங்களைக் குவித்திருக்கிறது. சமீபத்தில் லேடோ ரஸ்தா பூர்த்தியானபின் தளர்த்தப்பட்ட சைனாவின் முற்றுகையின் மூலம் சீனப்படைகளுக்கு அவசியமான முஸ்தீப்புகளும், சர்ப்பராக்களும் கிடைக்கவில்லை. சரியான முஸ்தீப்புகள் இருந்தால் சீனர்கள் உலகத்திலேயே சிறந்த போர்வீரர்களாயிருப்பார்கள். அவர்களின் வீரம் சால்வின் நதி, பர்மா போரில் ருஜுவாகிவிட்டது. பர்மாவுக்குப் பின்புறத்திலிருந்தும், ஆகாயமார்க்கமாகவும், சைனாவுக்கு அதிக ஸப்ளைகள் வந்துகொண்டிருக்கின்றன. நேசதேசத்தார்கள மாண்டலேயைக் கைப்பற்றியதென்பது எதிரியை ரெங்கூனிலிருந்து துரத்தி அடித்துவிடலாம் என்பதையும், அங்கிருந்து பர்மா ரஸ்தாவுக்கு சாமான்களை அனுப்ப ஒரு துறைமுகமாக உபயோகப்படுத்தலாம் என்றும் நம்பிக்கையை உண்டுபண்ணுகிறது.

ஜனரலிஸிமோ சியாங்கேஷேக்கின் படைகள் சைனாவின் குறுக்கே கிழக்குமுகமாக முன்னேறி ஜப்பானியர் வசமுள்ள சியாங்ஷா, காண்டன், இருப்புப்பாதையைத் துணிக்க வேண்டும். இதேசமயத்தில் நேசதேசப்படைகள் சீனக்கடற்கரையில் இறங்கவேண்டும். அவ்விதம் நடைபெற்றால் ஜப்பானியப் படைகள் தரைமார்க்கமாகப் பின்வாங்குவது அவசியமாகும். அது நடைபெறுவதுதான் சந்தேகமானது.

**பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.**

**அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.**

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 247 (2-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 5- 5-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 |
| 6- 5-45 | கீரனூர் | ... ,, | 7.00 |
| ,, | நாஞ்சூர் | ... ,, | 7.30 |
| 7- 5-45 | குடுமியாமலை | ... ,, | 7.00 |
| ,, | பரம்பூர் | ... ,, | 7.30 |
| 8- 5-45 | பெருங்களூர் | ... ,, | 7.00 |
| ,, | ஆதனக்கோட்டை | ... ,, | 7.30 |
| 9- 5-45 | அரிமளம் | ... மாலை | 7.00 |
| ,, | ராயவரம் | ... ,, | 7.30 |
| 10- 5-45 | பொ. புதுப்பட்டி | ... ,, | 7.00 |
| ,, | வேந்தம்பட்டி | ... ,, | 7.30 |
| 11- 5-45 | கிள்ளுகோட்டை | ... ,, | 7.00 |
| ,, | மலையடிப்பட்டி | ... ,, | 7.30 |

### பிரஸங்கம் 248 (1-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 12- 5-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 |
| 13- 5-45 | சூரக்காடு | ... ,, | 7.00 |
| ,, | கோட்டைக்காடு | ... ,, | 7.30 |
| 14- 5-45 | மலைக்குடிப்பட்டி | ... ,, | 7.00 |
| ,, | கோனாபட்டு | ... ,, | 7.30 |
| 15- 5-45 | குழிபிரை | ... ,, | 7.00 |
| ,, | செவலூர் | ... ,, | 7.30 |
| 16- 5-45 | அண்டக்குளம் | ... மாலை | 7.00 |
| ,, | கிள்ளனூர் | ... ,, | 7.30 |
| 17- 5-45 | பனையப்பட்டி | ... ,, | 7.00 |
| ,, | ராங்கியம் | ... ,, | 7.30 |
| 18- 5-45 | கொடும்பாளூர் | ... ,, | 7.00 |
| ,, | விராலூர் | ... ,, | 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | |
|---|---|
| 5—5—45 | திருமயம். |
| 6—5—45 | ஏம்பல். |
| 8—5—45 | கோனாபட்டு. |
| 9—5—45 | கீழாநிலை-புதுப்பட்டி. |
| 10—5—45 | ஆலங்குடி. |
| 11—5—45 | புதுக்கோட்டை. |
| 12—5—45 | பொன்னமராவதி. |
| 13—5—45 | விராச்சிலை. |
| 15—5—45 | பேராம்பூர். |
| 16—5—45 | கரம்பக்குடி. |
| 17—5—45 | குழிபிறை. |
| 18—5—45 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 1.600—7-5-45.